AUGUST 24, 2020
MONDAY
VOL: 006/079
RS. 10.00
PROVINCIAL

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk
தமிழ் Mirror

# ‘அமைச்சு காரணமென்றால் பதவியைத் துறப்பேன்’

■ றம்ஸி குத்தூஸ்

நாட்டில் கடந்த 17ஆம் திகதி ஏற்பட்ட திடீர் மின்துண்டிப்புக்கு மின்சக்தி அமைச்சுதான் பொறுப்பாகுமென, அறிக்கையில் பரிந்துரைக்க ப்படுமாயின்,



அமைச்சுப் பதவியை நான், இராஜினாமாச் செய்வேன் எனத் தெரிவித்த மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, அது இலங்கை அரசியல் வரலாற்றில் ஓர் எடுத்துக்காட்டாக அமையும் என்றார்.

தொடர்ச்சி P2

# ரிஷாட் அதிரடி; நௌஷாட் அவுட்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ஏ.எம். எம். நௌஷாட்டை, அக்கட்சியிலிருந்து காங்கிரஸின் தலைவர் ரிஷாட் பதியுதீன் இடைநிறுத்தியுள்ளார் எனத் தெரிவித்துள்ள காங்கிரஸ்,



கட்சி யாப்புக்கமைய இடைநிறுத்த ப்பட்டுள்ளார் என்றும், அத்துடன்,

தொடர்ச்சி P2

# ‘வெள்ளை யானைக்கு’

# வருகிறது சிக்கல்

## 9 அமைச்சுகளால் கிடைத்த பயன்கள் என்ன?

## 1987 முதல் செலவுகள் திரட்டப்படுகின்றன

## திருத்துவதா? நீக்குவதா? என ஆராய்வு

■ மகேஸ்வரி விஜயனந்தன்

அரசமைப்பின் 13ஆவது திருத்தம், அதுதொடர்பிலான மாகாண சபை முறைமை ஆகியவற்றை இல்லாமல் செய்வதற்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சில், உயர்மட்டத்தில் நகர்வொன்று முன்னெடுக்கப்படுவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

தொடர்ச்சி P2

# மங்கள கரணம்

செயற்பாட்டு அரசியலிலிருந்து முழுமையாக ஒதுங்குவதாகத் தெரிவித்திருந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருந்த சகல அரசியல் தொடர்புகளையும் முழுமையாகக் கைவிட்டுவிட்டு, ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைய உள்ளாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



அவர், ஐக்கிய தேசிய கட்சியின் அடுத்த தலைவருடன் இணைந்து, செயற்பாட்டு அரசியலில் ஈடுபடத் தீர்மானித்துள்ளாரெனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



# புதிய எம்.பிக்களுக்கு இருநாள் செயலமர்வு

ஒன்பதாவது நாடாளுமன்றத்துக்குப் புதுதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு, ஒகஸ்ட் 25, 26ஆகிய இரண்டு தினங்களும் காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரையிலும் இருநாள் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

தொடர்ச்சி P2

# தமிழரசின் மத்திய குழு வவுனியாவில் கூடுகிறது

■ கே.எல்.ரி. யுதாஜித்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில், வவுனியா, குருமன்காடு ஹோட்டல் பிறின்ஸஸ் ரோஸ் விடுதியில் ஒகஸ்ட் 29ஆம் திகதி கூடவுள்ளது.

இக்கூட்டத்தில், தமிழ்த்




தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.

தொடர்ச்சி P2

# பிசிஆர் பரிசோதனைகளை இரட்டிப்பாக்க நடவடிக்கை

கட்டுநாயக்க, மத்தள ஆகிய இரண்டு சர்வதேச விமான நிலையங்களிலும் மேற்கொள்ளப்படும் பிசிஆர் பரிசோதனைகளை இரு மடங்காக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென விமான சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கான வசதிகள் விமான நிலையத்துக்குள்



முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவித்த விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.

தொடர்ச்சி P2

# ‘தேர்ச்சிப் பரீட்சைகளின் பின் வெட்டுப்புள்ளிகள் வெளியாகும்’

பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்வதற்கான தேர்ச்சிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் கிடைத்தவுடன் பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளை வெளியிடவுள்ளதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

“பல்கலைக்கழகங்களில் 36 பாடநெறிகளுக்கான தேர்ச்சிப் பரீட்சைகள்



நடைபெறுகின்றன” என ஆணைக்குழுவின் உப-தலைவர் பேராசிரியர் ஜனிட்டா லியனகே கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

# விசர்நாய் கடித்ததில் இருவர் உயிரிழப்பு

■ செந்தூரன் பிரதீபன்

இருவேறு சந்தர்ப்பங்களில் விசர் நாய் கடிக்கு உள்ளான இருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையில், நேற்று (23) உயிரிழந்துள்ளனர்.



துணைவி, சங்கரத்தைப் பகுதியைச் சேர்ந்த, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் தரம் 11இல் கல்வி கற்ற தவச்செல்வன் தர்சன் என்ற மாணவனும் மன்னார் தாழ்வுப்பாடு பகுதியைச் சேர்ந்த ஜெபநேசன் பிஜிதாரோ கொன்சிலிக்கா (வயது 39) என்ற தாயுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சில நாள்களுக்கு முன்னர், நாய்கடிக்கு உள்ளான மாணவன்,

தொடர்ச்சி P2

# 12 வயதுக்கு மேல் முகக்கவசம் கட்டாயம்


உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, 12 வயதுக்கும் மேற்பட்டோர் கட்டாயமாக முகக்கவசத்தை அணிய வேண்டுமென உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும், 5 வயதுக்குக் கீழ்பட்ட குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் குழந்தைகள் நலன்கருதி முகக்கவசம் அணியத்



தேவையில்லையென உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# 12ஆவது மரணம்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில், அங்கொட, ஐடிஎச்சில் அனுமதிக்கப்பட்டிருந்த 47 வயதான இந்தியப் பெண், நேற்று (23) மரணமடைந்தார். அவரது இறுதி கிரியைகள், கொடிகாவத்தை பொது மயானத்தில், நேற்றுமாலை இடம்பெற்றது.

தொடர்ச்சி P2

# தப்ப முயன்ற நால்வர் சி.ஐ.டியிடம் சிக்கினர்

ஒருங்கிணைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த நால்வர், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் (சி.ஐ.டி) கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, நேற்று (23) கைது செய்யப்பட்டனர்.

இவர்களில், பாதாளக்குழுவைச் சேர்ந்த துப்பாக்கிதாரி வெல்லே சாரங்கவும் அடங்குவார். டுபாய் நோக்கிச் செல்வதற்குத் தயாராக இருந்த நிலையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லே சாரங்கவுடன், ரணசிங்க ஆராச்சிகே இஷார லக்மால், அங்கொட லொக்காவின் சகாக்களான கதலுவ லியனகே புத்திக சஞ்சீவ, காப்தீன் மொஹமட் கபீர் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர் என சி.ஐ.டியினர் அறிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

# ட்ரோன் செலுத்திய சீனப் பிரஜை கைது



கொழும்பு-3, அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் ட்ரோன் கெமராவைச் செலுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், சீனப்பிரஜையொருவர் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் ட்ரோன் கெமராவைச் செலுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே 40 வயதான சீனப் பிரஜை, நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னர், ட்ரோன் கமெராக்களைச் செலுத்தல் தொடர்பில் கடுமையான வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், ட்ரோன் கமெராக்களைப் பாதுகாப்பு அமைச்சில்

தொடர்ச்சி P2



# கிழங்கு வரி அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ கிராமுக்கான வரியை 5 ரூபாயால் அதிகரிப்பதற்கு நிதி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில், இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு ஒரு கிலோ கிராமுக்கான வரி 55 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளது.

“உருளைக்கிழங்கு அறுவடை, நாட்டில் ஆரம்பித்துள்ள நிலையில், உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது” என நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர் ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## ‘அமைச்சு காரணமென்றால் பதவியைத் துறப்பேன்’

திடீர் மின்வெட்டு தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு, அதன் அறிக்கையை இன்று (24) கையளிக்கவுள்ளது. இந்நிலையிலேயே, மின்சக்தி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாத்தறை-அக்குரஸ்ஸையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“மின்சக்தி அமைச்சு தொடர்பில் கற்றுக்கொண்டிருக்கின்றேன். அவ்வாறு கற்றுக்கொண்டிருக்கும் போதுதான், திடீர் மின்தடை ஏற்பட்டது. விசாரணைகளுக்காக அன்று நண்பகலே குழுவொன்றை நியமித்தேன்” என்றார்.

**மின்தடை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, இன்று (24) கிடைக்குமென எதிர்பார்த்துள்ளேன்**

மின்சக்தி அமைச்சுத்தான் இதற்குப் பதிலளிக்க வேண்டுமாக இருந்தால், அமைச்சுப் பதவியை ஏற்றதிலிருந்து 96 மணித்தியாலங்கள் மட்டுமே நான், இருந்துள்ளேன். மின்சக்தி அமைச்சே தவறுக்குக் காரணம் என்றால், செவ்வாய்க்கிழமையிலிருந்து, நானிருக்க மாட்டேன். மின்சக்தி அமைச்சுக்கு வேறொருவர் அமைச்சராக இருப்பார் எனத் தெரிவித்த அவர், அவ்வாறான எடுத்துக்காட்டு இலங்கையில் முதற்றடவையாகப் பதிவாகும் என்றார்.

இதுதொடர்பில், தமிழ்மிரருக்குக் கருத்துரைத்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும, “மின்தடை தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, இன்று (24) கிடைக்குமென எதிர்பார்த்துள்ளேன்” என்றார்.

# வருகிறது சிக்கல்

அந்தத் திருத்தத்தை முற்றாக இல்லாதொழிப்பதற்கான வழிமுறைகளை அமைச்சின் முக்கியஸ்தர்கள் ஆராய்ந்து வருகின்றனர் எனவும் அந்த முக்கியஸ்தர்களின் பரிந்துரைகளுக்கு அமைய, அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு, அமைச்சரவைக்கு அனுப்பிவைப்பதற்கும் கலந்துரையாடப்பட்டுள்ளதென அறியமுடிகின்றது.

மாகாண சபைகளின் செலவுகளை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதுள்ளது. எனினும், மாகாண சபைகளின் ஊடாக மக்களுக்கு சேவைகள் கிடைக்கவில்லையென அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனையடுத்தே, மாகாண சபைகளின் செயற்பாடுகளை ஆராய்ந்து. 13ஆவது திருத்தத்தை முற்றாக இல்லாதொழிக்கும் யோசனையைத் தயாரிக்கும் நடவடிக்கையை அமைச்சு முன்னெடுத்துள்ளதாக அறியமுடிகின்றது.

ஒன்பது மாகாண சபைகளுக்கும் 1987ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் செலவிடப்பட்ட நிதி எவ்வளவு, அதனால், கிடைத்துள்ள நன்மைகள் என்ன?. ஒவ்வொரு மாகாணத்துக்குக் கீழும் நியமிக்கப்பட்ட, அமைச்சுகளால், கிடைத்திருக்கும் பயன்கள் எவை, என்பது தொடர்பில் ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கையிட, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் முக்கியஸ்தர் ஒருவர் கருத்துரைக்கையில், “13ஆம் திருத்தம் என்பது “வெள்ளை யானை” 9 மாகாணங்களுக்கும் ஒன்பது விவசாய அமைச்சர்கள் இருக்கின்றனர். இலங்கையில் விவசாயத்துறை முன்னேற்றம் கண்டுள்ளதா? அதேபோல் முழு இலங்கைக்கும் 9 மாகாண கல்வி அமைச்சர்கள் இருக்கின்றனர். ஆனால் மாகாண கல்வித்துறை முன்னேற்றம் அடையவில்லை. எனவே, இவ்வாறு தனிப்பட்ட ரீதியில் மாகாண அமைச்சுகள் அனைத்துக்கும் காணப்படும் இலங்கை குறித்த துறைகளில் முன்னேற்றமடையவில்லை என்றால் நாம் இது தொடர்பில் தேடியறிவது அவசியமாகும்” என்றார்.

“எனவே, இவற்றை ஆராயவெனக் குழுவொன்றை அமைத்து, இந்த மாகாண சபைகளுக்கான செலவுகள், செலவுகள் மூலம் கிடைத்த பலன்கள் என்பவை தொடர்பில் ஆராய்ந்து, அதற்கமையவே மாகாண சபைகள் வேண்டுமா, வேண்டாமா? என்பது குறித்துத் தீர்மானிக்கப்படும்” என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், இதற்காக அமைச்சரவைக்குப் பத்திரம் ஒன்றும் தாக்கல் செய்யப்படும். 1987ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலும் ஒன்பது மாகாண சபைகளுக்கான செலவுகள் குறித்து ஆராயவே குழு நியமிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், இந்தக் குழுவில் அமைச்சின் அதிகாரிகளே இருப்பார்களென்றும், இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், அதனை அமைச்சரவைப் பத்திரமாக அமைச்சரவையில் முன்வைத்து, அமைச்சரவையின் முடிவுக்கமையவே, 13 ஆவது திருத்தம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினர், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்கலேயை, ஒகஸ்ட் 21ஆம் திகதியன்று கொழும்பில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதன்போது, இலங்கையில் அதிகாரப் பகிர்வின் ஆரம்பமாக கருத்தப்படும் மாகாண சபை நிர்வாகத்தை அறிமுகப்படுத உதவிய அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த புதுடெல்லி தொடர்ந்தும் பற்றுறுதியுடன் இருப்பதாக, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்கலே தெரிவித்திருந்தாரென, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விடுத்திருந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரிஷாட் அதிரடி; நௌஷாட் அவுட்

கட்சி சார்ந்து அவர் வகித்த பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் நலன்களுக்கு எதிராகவும் நெறிமுறைகளை மீறிச் செயற்பட்டமையாலுமே அவர் இடைநிறுத்தப்பட்டுள்ளார் என, காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த பொதுத்தேர்தல் காலத்தில், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் நௌஷாட்டின் பேச்சுகளும் செயற்பாடுகளும் கட்சிக்குப் பாதகமாக அமைந்தன என்பதாலேயே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மங்கள கரணம்

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு அவருக்கு அழைப்புக் கிடைத்துள்ளது என்றும் எனினும், முறையாகப் பதில் எதையும் அவர் விடுக்கவில்லையென்றும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த பொதுத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக, மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருந்த மங்கள சமரவீர, இடைநடுவில் வாபஸ் பெற்றுக்கொண்டார். இந்நிலையில், ஐக்கிய தேசிய கட்சிக்கு புதிய தலைவர் ஒருவரைக் கொண்டுவரும் கடுமையான முயற்சிகளில் அவர் ஈடுபட்டுள்ளாரென அறியமுடிகின்றது.

## பிசிஆர் பரிசோதனைகளை இரட்டிப்பாக்க நடவடிக்கை

சானக்க, விமான நிலையங்களை மீண்டும் திறப்பது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன என்றார்.

“விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டதன் பின்னர், வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை அதிகளவில் நாட்டுக்குள் அழைத்து வருவதே தமது முதற்கடமையாகும்” என்றார்.

இந்நிலையில், இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அடுத்த வாரம் முதல் இரு மடங்கால் அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவித்த அவர், இதனூடாக, தற்போது அழைத்துவரப்படும் இலங்கை பிரஜைகளின் எண்ணிக்கையை இரு மடங்காக அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொருத்துவதற்காக,

**மத்தள விமான நிலையத்திலும் இதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது**

பிசிஆர் பரிசோதனை இயந்திரங்கள் இரண்டு, கொண்டு வரப்படவுள்ளன எனத் தெரிவித்த அவர், எவ்வாறாயினும் நாளொன்றில் அழைத்துவரப்படும் பிரஜைகளின் எண்ணிக்கை தொடர்பில் சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ளது என்றார்.

வைத்தியசாலைகளிலுள்ள வசதிகள், கொரோனா வைரஸ் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய இயலுமை ஆகியவற்றை அடிப்படையாக் கொண்டு, பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், மத்தள விமான நிலையத்திலும் இதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது என்றார்.

## 12 வயதுக்கு மேல் முகக்கவசம் கட்டாயம்

இதேவேளை, “இரண்டு வருடங்களுக்குள் கொரோனா வைரஸ் முடிவுக்கு வரலாம் என நம்புகிறோம்” என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய எம்.பிக்களுக்கு இருநாள் செயலமர்வு


அச்செயலமர்வில் பங்கேற்குமாறு, புதிய உறுப்பினர்கள் சகலருக்கும், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

இரண்டு நாள் செயலமர்வுக்குப் பிரதான அதிதிகளாக, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்பர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இதில் பங்கேற்பார் என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## விசர்நாய் கடித்ததில் இருவர் உயிரிழப்பு

உரியமுறையில் சிகிச்சை பெற்றிருக்கவில்லை எனவும் நெஞ்சு வலியால் அவதிப்பட்டுள்ளார். இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில், நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டார். சுய நினைவை இழந்த நிலையிலேயே அந்த மாணவன் மரணமடைந்துள்ளார் என வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வீட்டில் செல்லமாக வளர்த்த நாயொன்று தாயையும் மகனையும் கடித்துள்ளது. அதற்கு உரிய முறையில், சிகிச்சை பெறவில்லை. எனினும், வருத்தம் அதிகரித்த நிலையில், அத்தாய், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், சிகிச்சைப் பலனின்றி அங்கு உயிரிழந்துள்ளார். எனினும், நாயின் நகக் கீறல்களுக்கு உள்ளான அவரது மகன், உரிய முறையில் சிகிச்சை பெற்றுள்ளார்.



## 12ஆவது மரணம்

நாட்டுக்குள் கொரோனா வைரஸ் தொற்று இனங்காணப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட 12ஆவது மரணம் இதுவாகுமென அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து ஒகஸ்ட் 20ஆம் திகதி நாட்டுக்கு வந்திருந்த அவர், இருதய நோயாளி ஆவார். புற்றுநோயாலும் பீடிக்கப்பட்டிருந்தார். அவர், இரணவில சிகிச்சை மத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான ஆறுபேர், நேற்றையதினம் இனங்காணப்பட்டனர். அதிலொருவர் ஐக்கிய அமீரகத்திலிருந்து நாட்டுக்குத் திரும்பியவர். அவர், முல்லைத்தீவு ஸ்ரீ லங்கா விமானப்படை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

குவைத்திலிருந்து நாடுதிரும்பிய இருவரில் ஒருவர், திஸ்ஸமஹராம இக்கே சபாரி மத்திய நிலையத்திலும் மற்றையவர் கொழும்பு ஜிஎஸ்எச் ஹோட்டல் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து வருகைதந்தவர் ராஜகிரிய ஆயுர்வேத தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்திலும் இந்தியாவிலிருந்து வருகைதந்த இருவர், வஸ்கடுவ சிட்ரஸ் தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கந்தகாடு, சேனபுர போதைப்பொருள் தடுப்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மத்திய நிலையத்தில் 629 பேர் சிகிச்சைப்பெற்று வருகின்றனர் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய நிலைவரத்தின் பிரகாரம் 31,173 பேர், தனிமைப்படுத்தலை முடித்துகொண்டு, வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். அத்துடன், முப்படையினரால் நிர்வகிக்கப்படும் 52 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில், 7,304 பேர் இன்னும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் 22ஆம் திகதிய அறிக்கையின் பிரகாரம் 1,710 பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டத்திலிருந்து, இதுவரைக்கும் 202,907 பிசிஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## தமிழரசின் மத்திய குழு வவுனியாவில் கூடுகிறது

சம்பந்தன், பொதுச் செயலாளர் கி. துரைராசசிங்கம் உட்பட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய குழு பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில், முக்கிய விடயங்களாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நியமிப்பு, நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவு, எதிர்காலத்தில் கட்சியை வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் செல்வதற்கான வழிவகைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

**எதிர்காலத்தில் கட்சியை வளர்ச்சிப் பாதையில் முன்னோக்கிச் செல்வதற்கான வழிவகைகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன**

இணையத்தளங்கள், ஊடகங்களில் வெளியான கட்சிக்கும், கட்சித் தலைமைக்கும், உறுப்பினர்களுக்கும் எதிரான பிரசாரங்களும் செயற்பாடுகளும் குறித்தும் ஆராயப்படவுள்ளன.

மேலும், தேர்தல் காலத்தில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்படவுள்ளன.

## ‘தேர்ச்சிப் பரீட்சைகளின் பின் வெட்டுப்புள்ளிகள் வெளியாகும்’

இவற்றில் பெரும்பாலான பரீட்சைகளை நடத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற்கு, குறித்த தேர்ச்சிப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டியது அவசியாகும் என்றார்.

## தப்ப முயன்ற நால்வர் சி.ஐ.டியிடம் சிக்கினர்

இந்நிலையில், சந்தேகநபர்களில் ஒருவரான புத்திக சஞ்சீவவிடம் இருந்து 29 இலட்சம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்த சி.ஐ.டியினர், சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றனர்.

## ட்ரோன் செலுத்திய சீனப் பிரஜை கைது

பதிவு செய்யவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்த கொள்ளுப்பிட்டி பொலிஸார், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனைகளைப் பெற்றுவருவதாகவும் தெரிவித்தனர்.

19 ஐ நீக்கிவிட்டு

# பசிலை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவர முயற்சி

### 145 நிறுவனங்கள் ராஜபக்ஷர்கள் வசம்

நாட்டிலுள்ள 145 நிறுவனங்கள், ராஜபக்ஷர்களின் கீழேயே நிர்வகிக்கப்படுகின்றனவெனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார், பசில் ராஜபக்ஷவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதற்காகவே, 19 ஐ திருத்த முயற்சிக்கின்றனர் என்றும் சாடினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில், நேற்று (23) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் பங்கேற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் முன்வைத்த அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம், வெறும் வான வேடிக்கையாக மாத்திரமே அமைந்துள்ளதெனவும், 2/3 அதிகாரம் இருப்பதால், அரசாங்கம் சொல்கின்ற அனைத்தையும் சரியென ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் தெரிவித்தார்.

சரியான பாதையில் நாட்டைக் கொண்டு செல்லவே நாட்டு மக்கள் ஆளுந்தரப்புக்குப் பெரும் அதிகாரத்தை வழங்கினர் எனத் தெரிவித்த அவர், கொவிட் - 19 ஒளிக்கப்பட்டவுடன் நாட்டின் பொருளாதாரத்தை அரசாங்கம் எவ்வாறு மீட்டெடுக்கப் போகின்றது எனவும் கேள்வி எழுப்பினார்.

நாட்டுக்கு சுற்றுலாத்துறை ஊடாக 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டிக்கொள்வதே அரசாங்கத்தின் இலக்காகக் காணப்படுகின்றனதெனத் தெரிவித்த அவர், 1 பில்லியனை கூட ஈட்டிக்கொள்ள முடியாது என்பதே உண்மை நிலைமையாகக் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்தாலும், அவற்றைக் கொண்டு எதிர்பார்த்த வருமானங்களை ஈட்டிக்கொள்வதற்கான திட்டமிடல்கள் எவையும் அரசாங்கத்திடம் இல்லையெனத் தெரிவித்த அவர், அரசாங்கத்தின் கொள்கைகள் வெறும் புஸ்வானமாகவே உள்ளதெனவும் தெரிவித்தார்.

அத்தோடு அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்தில், நாட்டின் சகல துறைகளும் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவித்த அவர், புதிய அரசாங்கத்தின் அமைச்சுகளைப் பகிர்ந்துள்ள விதத்தைப் பார்க்கின்ற போது, ராஜபக்ஷர்களின் குடும்ப அமைச்சர்களிடம் மாத்திரம், 145 நிறுவனங்கள் உள்ளனவெனவும் சாடினார். மேற்படி நிறுவனங்களில் ஏழு நிறுவனங்களை, நாடாளுமன்ற உறுப்பினராகக்கூட தெரிவு செய்யப்படாத பசில் ராஜபக்ஷவே நிர்வகித்து வருகிறாரெனவும், பசில் ராஜபக்ஷ என்ற அமெரிக்க பிரஜையை நாடாளுமன்றத்துக்கு அழைப்பிப்பதற்காகவே அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்ய முற்படுகிறார்கள் எனவும் சாடினார்.



வெளிநாடுகளில் சிக்கியிருந்த

## 1,145 பேர் நாடு திரும்பினர்



இலங்கைக்கு வரமுடியாத நிலையில், வெளிநாடுகளில் சிக்கியிருந்த 1,145 பேர், நேற்றும் நேற்று முன்தினமும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் கட்டுநாயக்க, மத்தள விமான நிலையங்கள் ஊடாக நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதுடன், 09 விமானங்களில் இவர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அவர்களில் 906 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாகவும், 239 பேர் மத்தள விமான நிலையத்தின் ஊடாகவும் அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் 172 பேர் வெளிநாட்டவர்கள் என்பதோடு, அவர்களில் 127 பேர் சீனர்கள் எனவும், ஏனைய 45 பேர் சீசெல்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து 292 பேரும் இந்தியாவின் சென்னையிலிருந்து 14 பேரும், மலேசியாவிலிருந்து 291 பேருமாக மொத்தம் 597 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

**“ தொழில் நிமித்தம் சென்ற 35 பேரும் நயிரோப் நாட்டுக்குச் சென்ற 83 பேரும், கட்டார் நாட்டுக்குச் சென்ற 19 பேரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது**

இவர்களில், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டவர்களில் டுபாய் நாட்டுக்கு தொழில் நிமித்தம் சென்ற 35 பேரும் நயிரோப் நாட்டுக்குச் சென்ற 83 பேரும், கட்டார் நாட்டுக்குச் சென்ற 19 பேரும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## அடுத்த வருடத்திலிருந்து புதிய தொழில் வாய்ப்புகள் மலரும்

கொவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாக பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கையின் தொழில் துறைகளுக்குள் அடுத்த வருடத்திலிருந்து மறு மலர்ச்சி ஏற்படுமென வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ், புதிய தொழில் வாய்ப்புளை உருவாக்குவதற்கான திட்டமொன்றை அடுத்த வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் நிறுவனத்தின் நலன்புரி செயற்பாடுகளை மேம்படுத்துமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என்றும் தெரிவித்தார்.

அதேபோல் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்லும் இலங்கையர்கள் தொடர்பான தகவல் கட்டமைப்பொன்றை விரைவில் தயாரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்வோர் நாடு திரும்பிய பின்னர் உள்நாட்டில் தொழில் இல்லாமல் கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு, அடுத்த ஜனவரி முதல் தொழில் இல்லாத நெருக்கடியொன்று உருவாகுமெனத் தெரிவித்த அவர், அடுத்த வருடத்தின் ஆரம்பப் பகுதியிலிருந்து இலங்கைக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மறுதிசையில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்புவதைவிடவும், ஜப்பான், கொரியா போன்ற நாடுகளுக்கு ஊழியர்களை அனுப்புவது தொடர்பில் அவதானம் செலுத்தி வருவதாகத் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்திய நாடு என்ற வகையில், மற்றைய நாடுகளுக்கு கிடைக்கின்ற தொழில் வாய்ப்புகளை இலங்கைக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

இளம் பெண் படுகொலை;

## பிரதான சந்தேக நபருக்கு வலைவீச்சு

எஸ். றொசேரியன் லெம்பேட்

குடும்பத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நெடுந்தீவைச் சேர்ந்த இளம் பெண்ணை மன்னாருக்கு அழைத்துச் சென்று கொலை செய்து உப்பளத்தில் வீசிய சம்பவம் தொடர்பில் அந்தப் பெண்ணின் சகோதரி உள்ளிட்ட இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலையின் பிரதான சந்தேக நபரனான இளம் பெண்ணின் மாமனார் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வருகிறார்.

நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜூயின் (வயது 21) என்ற இளம் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, மன்னார் உப்பளத்தில் வீசப்பட்டமை, மன்னார் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்க, உப பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள, மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கிருஸாந்தன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ், உப பொலிஸ் பரிசோதகர் கங்காபதி ஆர்த்தனன் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் சோமதிலக, பொலிஸ் அதிகாரிகளான பியசேன, வரதன், நிசாந்தன், பிரியா, பொலிஸ் சாரதி ஜனந்தன் ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர், இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் நகரில் உள்ள உணவகம் ஒன்றின் சிசிடிவி பதிவை வைத்து நெடுந்தீவைச் சேர்ந்த பெண்கள் இருவரும் ஒருவாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை

## இந்தியாவுக்கு முதலிடம்

### இரண்டாவது இடத்தில் சீனா

பா.நிரோஸ்



2017ஆம் ஆண்டு சுற்றுலாத்துறையினூடாக மொத்த அந்நிய செலாவணியாக 3 ஆயிரத்து 924.9 டொலர் மில்லியன்கள் வருவாயாகக் கிடைத்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் 2017ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2017ஆம் ஆண்டு 21 இலட்சத்து 16 ஆயிரத்து 407 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகைத் தந்துள்ளனர். இது 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 32 சதவீத வளர்ச்சி எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு சுற்றுலாத்துறையினூடாக மொத்த அந்நிய செலாவணியாக 3 ஆயிரத்து 924.9 டொலர் மில்லியன்கள் வருவாயாகக் கிடைத்துள்ளன. 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இது 11.5 சதவீத வளர்ச்சியெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி, ஜூலை, டிசெம்பர் மாதங்களிலேயே, நாட்டுக்கு அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகைத் தந்துள்ளனர். நாட்டுக்கு வருகைத் தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தியா 18.17 சதவீதத்துடன் முதலிடத்திலும், சீன 12.7 சதவீதத்துடன் இரண்டாவது இடத்திலும் காணப்படுகிறது. நாட்டுக்கு வரும் மொத்த சுற்றுலா பயணிகளின் அளவில் இது

சர்வதேச நிபுணர்களுடன்

## சட்டமா அதிபர் விசேட சந்திப்பு



சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உள்ளிட்ட குழுவினர், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான போதைப்பொருள் ஒழிப்பு, குற்றத்தடுப்புப் பிரிவின் பிரதிநிதிகள், ஐ.நா சபையின் சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு, குற்றத்தடுப்புப் பிரிவின் கூட்டு வன்முறைத் தடுப்பு தொடர்பான நிபுணர் குழுவினரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

சட்டமா அதிபரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், வலய மட்டத்திலான போதைப்பொருள் விநியோகச் செயற்பாடுகள், பயங்கரவாதச் செயற்பாடுகள் தொடர்பாக நிலவும் அன்றாடச் சிக்கல்கள், வலயத்துக்கு உட்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக சட்டமா அதிபரின் தொடர்பாடல் அதிகாரி அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தோடு, நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் தடுப்புக்கான பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், பிரபல பாதாள குழு உறுப்பினர்களில் ஒருவரான ஈரிகம ராஜபக்ஷ கெதர ஆனந்த சில்வா என்னும் 'யகா சம்பத்' என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, அவரை இன்று(24) கடுவலை நீதிவான் முன்பாக ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

'தமிழ் மக்கள்

## பொறுப்புகளைப் பிரித்து வழங்கியுள்ளனர்'

வடக்கில் இருந்து புதிய தலைவர்களை தமிழ் மக்கள் தெரிவுசெய்துள்ளதன் மூலம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதெனக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் , தமிழ் மக்கள் பொறுப்புகளைப் பிரித்து அளித்துள்ளனர் என்றார்.

அதேபோல், அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வடக்கு பிரதேசங்களுக்கும் கொண்டு செல்லப்படுதெனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

கண்டிக்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலில் வடக்கு மக்கள் அதிகாரத்தை ஒரு கட்சிக்கு மாத்திரம் வழங்காமல் பிரித்து வழங்கியிருப்பதை காணமுடிகின்றது என்றும், வடக்கில் அரசியலிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

வடக்கில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மாத்திரமே உள்ளது என்ற நிலைமை மாறியிருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகத் தங்களுக்கு மாத்திரம்தான் கதைக்க முடியும் எனக் கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் கூறியிருந்ததெனவும், இன்று அந்த நிலைமை மாறியுள்ளதெனவும் தெரிவித்திருந்தார்.

பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு மாத்திரம் அதிகாரத்தை வழங்காமல் வேறு கட்சிகளின் தலைவர்களைத் தெரிவு செய்திருக்கின்றனர் எனக் கூறிய அவர், சி.வி.விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மட்டக்களப்பில் பிள்ளையான். அதேபோன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து அங்கஜன் இராமநாதன் இருக்கின்றார். அதன் பிரகாரம், தமிழ் மக்கள் பொறுப்புகளைப் பிரித்து வழங்கியுள்ளனர் என்றார்.



**வாடகைக்கு**

இரத்மலான ஸ்ரீ தர்மராம வீதி வளவாவத்தவில், அறையொன்று வாடகைக்கு உண்டு 0763750995

வருமான அதிகரிப்பு

## 'தகவல்களை ஒருங்கிணைப்பது அவசியம்'

வருமான அதிகரிப்பு, ஏற்றுமதி ஊக்குவிப்புக்கான மாவட்ட, கிராம மட்டத்திலான வேலைத்திட்டங்களைத் தயாரிக்க வேண்டியது அவசியமெனத் தெரிவிக்கும் பொருளாதார புத்துயிர்ப்பு, வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ, அது தொடர்பான தரவுகளை ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்துள்ளார்.



இலங்கை நிர்வாகச் சங்கத்தின் பிரதானிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர்,

தொழில் உருவாக்கம், வருமான அதிகரிப்பு, ஏற்றுமதி உக்குவிப்பு என்பவற்றுக்கான மாவட்ட, கிராம மட்டத்திலான வேலைத்திட்டங்களைத் தயாரித்து, அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, மேற்படி திட்டங்கள் தொடர்பாகத் தேடிப்பார்க்கும் வகையில், அரச நிர்வாகப் பொறிமுறையை மேம்படுத்த வேண்டியது அவசியமெனச் சுட்டிக்காட்டிய அவர், மேற்படித் தரவுகள் அனைத்தையும் ஒரே இடத்துக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

## விபத்துகளில் சிக்கி ஒரே நாளில் 11 பேர் பலி

### 8 பேர் காயம்: ரயிலுக்கும் நட்டம்

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற ஐந்து விபத்துகளில் சிக்கி ஒரே நாளில் 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அலவ்வ பிரதேசத்தில் (22) கார் ஒன்றும் டிப்பர் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதால், மரண வீட்டுக்குச் சென்று வந்த கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் ஐவர் சம்பவ இடத்திலேயே பலியாகி இருந்தனர்.

அதே தினத்தில் எல்ல வெள்ளவாய பிரதேசத்தில் மரண வீடொன்றுக்கு சென்ற மின்சார சபை ஊழியர்கள் அறுவரை ஏற்றிக்கொண்டு வந்த வான் ஒன்று 150 அடி பள்ளத்தாக்கில் புரண்டதால்



மூவர் சம்பவ இடத்திலேயே பலியாகி இருந்ததுடன், ஏனைய மூவரும் கடுமையான காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையின் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மேலும் அஹூங்கள்ள பகுதியில், 15 வயது சிறுவன் ஒருவர் டெக்டர் வண்டியொன்றை செலுத்துவதற்கு முற்பட்ட போது, அதற்குள் சிக்கி 11 வயது சிறுவன் ஒருவன் பலியாகியுள்ள பரிதாபரமான சம்பவம் ஒன்றும் நேற்று முன்தினம் பதிவாகியிருந்தது.

## அறிவித்தல்

## துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் கௌரவ ரோஹித அபேகுணவர்தன அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைய இவ்வமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களான இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மற்றும் வர்த்தக மற்றும் கப்பல் செயலகம் ஆகிய நிறுவனங்களின் பெயர்களை பாவித்து நடைபெறுகின்ற நிதி மற்றும் பல்வேறு ஊழல்கள் தொடர்பான சம்பவங்கள் ஏற்படுவதனை தடுக்கும் நோக்கில் அவ்வாறான விடயங்கள் தொடர்பான தகவல்களை அறிவிப்பதற்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமென்பதை அறியத்தருகின்றேன்.

| பதவி | நிறுவனம் |
| --- | --- |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு |

**தொ.இல. 011-2323258**

**செயலாளர்**

**துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு**

கால்வாய் திட்டத்தைத் துரிதப்படுத்த

# பிரதமர் அறிவுறுத்தல்

சிறு, பெரும்போகம் ஆகிய இரு சந்தர்ப்பங்களிலும் வடமேல் மாகாணத்தில் 12, 500 ஹெக்டேயர் விவசாய நிலங்களை வளப்படுத்தும், வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

மஹிந்த சிந்தனை கொள்கையின் கீழ், 2014 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், கடந்த அரசாங்க காலத்தில் நிறுத்தப்பட்டது.

குருநாகல், மொரகொல்லாகம, சியம்பலன்கமுவவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (22) நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது, உத்தேச வடமேல் மாகாண கால்வாய் திட்டம் குறித்த திட்ட அறிக்கை, திட்ட பணிப்பாளர் பொறியியலாளர் அசோக பெரேராவால் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தின் ஊடாக, பிரதேசத்தின் 350 சிறிய குளங்கள், 8 பாரிய குளங்களை வளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதுடன், ஹக்வட்டுன நீர்த்தேக்கத்தின் கீழ் 2,500 ஹெக்டேயர், மீ ஓய நீர்ப்பாசன அமைப்பில் 3,500 ஹெக்டேயர் உள்ளடங்கலாக மொத்தமாக 12, 500 ஹெக்டேயர் விவசாய நிலங்களில் சாகுபடி செய்யப்படவுள்ளது.



இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தப்படுவதன் ஊடாக, பெரும்போகத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த சாகுபடி நடவடிக்கைகள், சிறு, பெரு ஆகிய இரு போகங்களிலும் சாகுபடி செய்யக்கூடிய வகையில் நீர் விநியோகிக்கப்படும்.

கடுமையான குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக, சிறுநீரக நோய் குறித்த பிரச்சினைளைத் தீர்த்தல், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவது, மனிதர்களுக்கும் காட்டு யானைகளுக்கும் இடையிலான போராட்டத்தைக் குறைத்தல் உள்ளிட்ட பல நன்மைகள் இந்த வடமேல் மாகாண கால்வாய் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

> **இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தப்படுவதன் ஊடாக, பெரும்போகத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த சாகுபடி நடவடிக்கைகள், சிறு, பெரு ஆகிய இரு போகங்களிலும் சாகுபடி செய்யக்கூடிய வகையில் நீர் விநியோகிக்கப்படும்**

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின்

## ஞாபகார்த்த தினம் அனுஷ்டிப்பு

**கே.எல்.ரி. யுதாஜித்**

சித்தாண்டி பிரதேசத்தில் இலங்கை இராணுவத்தின் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் 30ஆவது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வு, சித்தாண்டி முருகன் கோவிலுக்கு முன்பாக, பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் நேற்று (23) நடைபெற்றது.

இந்நிகழ்வில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் மு.முரளிதரன், வட, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஒன்றியத்தின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவி அமலநாயகி உட்பட பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



1990ஆம் ஆண்டு, இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையால் சித்தாண்டி, கிரான், சந்திவெளி, மாவடிவேம்பு, முறக்கொட்டான்சேனை பிரதேசங்களின் மக்கள் சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவிலில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த போது, இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் சுமார் 100க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, பின் காணாமல் ஆக்கப்பட்டனர்.



மத்தியஸ்த சபைகளின்

## நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

**எம்.எஸ்.எம். நூர்தீன்**

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக, கடந்த ஐந்து மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த மத்தியஸ்த சபைகளின் நடவடிக்கைகள், நேற்று முன்தினம் (22) முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன.

மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் அனுமதியுடனும் ஆலோசனையுடனும் மத்தியஸ்த சபை நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

மத்தியஸ்த சபையிடம் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ள வருபவர்களும் மத்தியஸ்த உறுப்பினர்களும் கைகளைக் கழுவி, சுகாதார நடைமுறைகளைப் பேணி நடந்துகொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என, காத்தான்குடி மத்தியஸ்த சபையின் தலைவர் எம்.ஐ.எம். உசனார் தெரிவித்தார்.

## 376 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்

அவுஸ்திரேலியா, டுபாய், கென்யா, கட்டார் ஆகிய 4 நாடுகளைச் சேர்ந்த 376 இலங்கையர்கள், நேற்று (23) கட்டுநாயக்க, மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய, அவுஸ்திரேலியாவிலிருந்து 239 இலங்கையர்களுடன் வந்த விமானம்,நேற்று அதிகாலை 3.38 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது.

இந்த விமானத்தில் வந்தவர்களுள் அதிகமானோர் உயர்கல்வி, தொழிலுக்காக அவுஸ்திரேலியாவுக்குச் சென்றவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன், டுபாயிலிருந்து 35 பேரும் கென்யாவிலிருந்து 83 பேரும் கட்டாரிலிருந்து 19 இலங்கையர்களும் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சிறைச்சாலைகளிலுள்ள

## பிள்ளைகளை விடுவிக்குமாறு அறிவுரை

போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில், சிறைவாசம் அனுபவித்து வரும் 46 பெண்களுடைய பிள்ளைகளும் சிறைச்சாலைக்குள்ளேயே தங்கும் நிலைமை காணப்படுவதால், அவ்வாறான சிறுவர்களை உடனடியாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளேவுக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளாரெனவும் கூறப்படுகிறது.

கர்பிணிகளாக இருக்கின்ற போதும், பிள்ளை பிறந்த சில நாள்களில் சிறைக்குச் சென்ற தாய்மார்களின் பொறுப்பில், நீதிமன்றத்தின் அனுமதியுடன் விடப்பட்ட 46 பிள்ளைகள் இருப்பதாகவும், இவர்கள் சகலரும் 5 வயதுக்கு உட்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனால், மேற்படி பிள்ளைகளை விடுவிப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும், அது தொடர்பான தகவல்களை விரைவில் பிரதமருக்கு அறிவிக்க உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்தார்.



## பட்டதாரிகளின் நியமனங்கள் தொடர்பில் புதிய அறிவிப்பு

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழுவால் அங்கிகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கும், நியமனங்கள் வழங்கப்படுமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதற்கமைய, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட, ஒத்திவைக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் அனைவரையும் செப்டெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக மேன்முறையீட்டை மேற்கொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, “நமது இளைஞர், யுவதிகள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்தது அவர்களது தவறல்ல. எனவே, பட்டதாரி நியமனத்தில் அவர்களும் உள்வாங்கப்பட வேண்டுமென, திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, “இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டக் கற்கை நெறிகளை உள்வாரியாகவோ வெளிவாரியாகவோ கற்க வாய்ப்புக் கிடைக்காதவர்கள் தான், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்துள்ளார்கள். இந்தப் பட்டம், இலங்கையில் அங்கிகரிக்கப்பட்டது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சான்றுப்படுத்துகின்றது.

“பட்டதாரி நியமனத்துக்கு விண்ணப்பம் கோரப்பட்ட போது, ‘அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம்’ என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது என்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

“தேர்தலுக்கு முன்னர் பட்டதாரிகளுக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்ட போது, வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது.

“பட்டதாரி நியமனத்தில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் முடித்தவர்கள் புறக்கணிப்படுவது எந்த வகையிலும் நியாயமானதல்ல. அரசு இந்த விடயத்தை உடனடியாக மீள் பரிசீலனை செய்து தகுதியான சகல பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில்

## ‘சமியா’ உயிரிழப்பு

கொலை செய்யப்பட்டு உள்ளதாக நம்பப்படும் ‘அங்கொட லொக்கா’வின் மற்றுமொரு நெருங்கிய நண்பரான, ‘சமியா’ எனப்படும் மல்வத்து ஹிரிபிட்டிய சமிந்த எதிரிசூரிய, பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சந்தேகநபர், ஹெரோய்ன் போதைப்பொருள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக, நேற்று முன்தினம் (22) இரவு பொலிஸாரால் கம்பஹா பிரதேசத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட போதே, இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேகநபர், கான்ஸ்டபிள் ஒருவரின் துப்பாக்கியைப் பறித்து, பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு தப்பிச் செல்ல முற்பட்ட போதே, சந்தேகநபர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் இதன்போது, சந்தேகநபர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



(படம்: குஷான் பதிராஜ)

## மட்டக்களப்பில் கடும் வரட்சி

### 64,761 பேர் பாதிப்பு

**வ. சக்தி**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக, மாவட்டத்தில் 23,335 குடும்பங்களைச் சேர்ந்த 64,761 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என, மாவட்டச் செயலகத்தின் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகஸ்தர் ஆர்.சிவநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வேளாண்மைச் செய்கைக்கு நீர் வழங்குகின்ற பிரதான குளங்களின் நீர் மட்டம் குறைந்துள்ளன. இவற்றைவிட பொறுகாமம், கோவில்போரதீவு, பெரியபோரதீவு, வெல்லாவெளி, பழுகாமம், களுதாவளை, களுவாஞ்சிகுடி, மகிளூர் போன்ற பல பகுதிகளில் அமைந்துள்ள சிறிய குளங்களும் வற்றியுள்ளன.

மாவட்டத்தின படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள பெரும்பாலான கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவி வருவதாக, அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக, நீர்த் தாங்கிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வரப்படுகின்ற போதிலும் அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் தமக்குப் போதுமானதாக இல்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும், மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கலாமதி பத்மராஜாவின் பணிப்புரைக்கமைய, அனர்த்த நிவாரண சேவைப் பிரிவால், வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களை அடையாளம் கண்டு, 08 பிரதேச செயலாளர்கள் ஊடாக, அப்பகுதியிலுள்ள பிரதேச சபைகளின் மூலம், வவுசர்களில் குடிநீர் வழங்கும் செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக 5.5 மில்லியன் நிதி விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மகப்பேற்று சத்திர சிகிச்சை பரீட்சை; திருகோணமலைக்கு முதலிடம்

**எப். முபாரக்**

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றிவரும், மாணிக்கம் சிவ தீபன்ராஜ் மகப்பேற்று சத்திர சிகிச்சை பரீட்சையில் அதி சித்தியடைந்துள்ளார்.

மகப்பேற்று சத்திர சிகிச்சை பரீட்சையில் சித்தி பெற்று அகில இலங்கை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - இறக்கக்கண்டி பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர், நிலாவெளி கைலேஸ்வரா மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வைத்தியத் துறையிலும் கல்வி பயின்றார்.



அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற மகப்பேற்று சத்திர சிகிச்சை பரீட்சையில் 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வாள் வெட்டில் சிறுவன் பலி

**ஏ.எச்.ஏ. ஹுஸைன், பேரின்பராஜா சபேஷ்**

கோஷ்டி மோதல் காரணமாக இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில், 15 வயதுச் சிறுவன் பலியானதாக, ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (22) இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில், செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த ரமணன் திவிராஜ் (வயது 15) என்ற மாணவனே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

மாணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், அவரது உறவினர்களான இருவரும் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சிறு வாய்த்தர்க்கமாக ஆரம்பித்த விடயமொன்றே, கோஷ்டி மோதலாக மாறி பின்னர், பழி தீர்க்கும் வகையில் வாள்வெட்டில் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இச்சம்பவம் தொடர்பாக, ஏறாவூர்ப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன், மாணவனின் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக, ஏறாவூர் ஆதார வைத்திய சாலையிலும், காயங்களுக்கு உள்ளானவர்களை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதித்துள்ளனர்.

சம்பத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளதுடன், கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வாள், ஏறாவூர் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரனைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஐ. அமெரிக்கா

### உலகளாவிய ரீதியில் கொவிட்-19 இறப்பு


# 800,000ஐ தாண்டியது

உலகளாவிய ரீதியில் கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 800,000ஐத் தாண்டியதுடன், கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 23 மில்லியனைத் தாண்டியுள்ளது.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் கொவிட்-19-இலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கையானது 14.7 மில்லியனைத் தாண்டியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவில் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 10.30 மணி வரையில் கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 5,685,990ஆகக் காணப்பட்டதுடன், கொவிட்-19-ஆல் 176,355 பேர் உயிரிழந்திருந்தனர்.

பிரேஸிலானது கடந்த 24 மணித்தியாலங்களில்



புதிதாக 50,032 கொவிட்-19 தொற்றுக்களையும், 892 கொவிட்-19-ஆலான உயிரிழப்புகளையும் பதிவுசெய்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்துள்ள நிலையில், அங்கு கொவிட்-19 தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையானது 3,582,362ஆக உயர்ந்துள்ளதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 114,250-ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் நேற்றுக் காலை எட்டு மணி வரையில் கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 69,239-ஆல் உயர்ந்து 3,044,940ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 912-ஆல் உயர்ந்து 56,706ஆகக் காணப்படுகின்றது.

> **கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 69,239-ஆல் உயர்ந்து 3,044,940 ஆகக் காணப்படுவதுடன், கொவிட்-19-ஆல் உயிரிழந்தோரின் எண்ணிக்கையானது 912-ஆல் உயர்ந்து 56,706ஆகக் காணப்படுகின்றது**

இந்தியா

### நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்

# 'இனி நடப்பவை நல்லவையாக அமையும்'



அடுத்தாண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை (அ.இ.அ.தி.மு.க) ஆட்சிக் கட்டிலில் அமர வைக்க வேண்டும் என்பதே இலக்காக இருக்க வேண்டும் என தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தேனி பெரியகுளத்தில் அ.இ.அ.தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே குறித்த கருத்தை துணை முதலமைச்சரும் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான ஓ. பன்னீர்செல்வம் வெளிப்படுத்தியிருந்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"தொண்டர்கள், நிர்வாகிகள் கட்சிக்கு மட்டுமே விஸ்வாசமாக இருக்க வேண்டும். தொண்டர்கள் எனக்கு விஸ்வாசமாக இருக்க வேண்டும் என நான் எண்ணியதே இல்லை. எண்ணம் தூய்மையாக இருக்க வேண்டும். எடுத்து வைக்கும் அடியும் தூய்மையாக இருக்க வேண்டும்.

அடுத்தாண்டில் அ.இ.அ.தி.மு.கவை ஆட்சிக் கட்டிலில் அமர வைக்க வேண்டும் என்பதே இலக்காக இருக்க வேண்டும், நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவையாக அமையும்" என்று கூறினார்.

இந்தியா

### பீஹார் சட்டசபைத் தேர்தல்களில்

# 'முதலமைச்சர் நிதிஷ் வேட்பாளர்'

இந்தியாவின் பீஹாரில் இடம்பெறவுள்ள சட்டசபைத் தேர்தல்களில் அம்மாநில முதலமைச்சர் நிதிஷ் குமாருடன், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முகமாக கூட்டணியிலுள்ள ஜனதா தளக் கட்சியும், லோக் ஜனஷக்தி கட்சியும், பாரதிய ஜனதாக் கட்சியும் (பா.ஜ.க) போட்டியிடுமெனவும், வெல்லுமெனவும் பா.ஜ.கவின் தலைவர் ஜெ.பி. நட்ட நேற்றுத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் நிதிஷ் குமாரின் ஜனதா தளக் கட்சிக்கும், லோக் ஜனஷக்திக் கட்சிக்குமிடையிலான மோதலுக்கு மத்தியிலேயே பீஹார் பா.ஜ.கவின் மெய்நிகர் சந்திப்பின்போது ஜெ.பி. நட்டாவின் மேற்படி கருத்துகள் வெளியாகியுள்ளது.

பீஹாரில் சட்டசபைத்



> **முதலமைச்சர் நிதிஷ் குமாரின் ஜனதா தளக் கட்சிக்கும், லோக் ஜனஷக்திக் கட்சிக்குமிடையிலான மோதலுக்கு மத்தியிலேயே பீஹார் பா.ஜ.கவின் மெய்நிகர் சந்திப்பின்போது ஜெ.பி. நட்டாவின் மேற்படி கருத்துகள் வெளியாகியுள்ளது**

தேர்தல்களானவை இவ்வாண்டு ஒக்டோபர் -நவம்பர் மாதங்களில் இடம்பெறவுள்ளன.





# கலிபோர்னியாவில் தொடரும் காட்டுத்தீ...

உயர் வெப்பநிலைகள், கடந்த வெள்ளிக்கிழமை தாக்கிய 100 உள்ளடங்கலான தற்போதைய மின்னல் தாக்குதல்களால் ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவின் பகுதிகளை ஏறத்தாழ இரண்டு டசின் கணக்கான காட்டுத்தீகள் நேற்று முன்தினமும் தாக்கிய வண்ணமுள்ளதாக வன, வனப்பாதுகாப்பு கலிபோர்னியா திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தியா



### ஐ.எஸ் பயங்கரவாதியெனச் சந்தேகிக்கப்படுவரின் வீட்டிலிருந்து

# தற்கொலை அங்கி, வெடிபொருள்கள் மீட்பு

இந்தியாவின் டெல்லியில் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதியெனச் சந்தேகிக்கப்படுபவரின் உத்தரப் பிரதேசத்தின் பல்ரம்பூர் மாவட்டத்திலுள்ள வீட்டிலிருந்து பல வெடிபொருள்களும், பயங்கரவாதத் தாக்குதலொன்றுக்கு பயன்படுத்தப்படுகின்ற தற்கொலை அங்கிகள் இரண்டும் மீட்கப்பட்டுள்ளன.

டெல்லி பொலிஸின் சிறப்புப் பிரிவு அதிகாரிகள் அணியொன்றால் மேற்கொள்ளப்பட்ட குறித்த நடவடிக்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ் கொடியொன்றும், ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக் குழுவுடன் தொடர்புடைய ஆவணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

டெல்லியின் தாவுலா குவான் பகுதியில் குறிப்பிட்ட நேரம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டின் பின்னரே யூசுஃப் அல்லது அபு யூசுஃப் என அறியப்படுகின்ற முஹமட் முஸ்டகீம் என்ற ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதி எனச் சந்தேகிக்கப்படும் குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமையிரவு கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த நபர் கைது செய்யப்படும்போது வெடிகுண்டுகளாக மாற்றப்பட்ட இரண்டு பிரஷர் குக்கர்களுடன் 15 கிலோ கிராம் வெடிபொருள்கள், பிஸ்டல் அதற்குரிய நான்கு காட்றிஜ்கள் மீட்கப்பட்டிருந்தன.

தென்னாபிரிக்கா

### தென்னாபிரிக்காவில்

# உலகின் வயதான மனிதர் இறந்தார்

உலகின் வயதான மனிதரெனக் கருதப்படும் தென்னாபிரிக்கரொருவர் 116 வயதில் இறந்துள்ளார்.

பிரெடி புளொம் என அறியப்படும் குறித்த நபரின் அடையாளப்படுத்தல் ஆவணங்களில் அவர் கிழக்கு கேப் மாகாணத்தில் 1904ஆம் ஆண்டு மே மாதம் பிறந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அது எப்போதும் கின்னஸ் உலக சாதனைகளால் சரிபார்க்கப்படவில்லை.

குறித்த நபர் பதின்ம வயதில் இருக்கும்போது அவரது முழுக் குடும்பமும் 1918ஆம் ஆண்டு ஸ்பானிஷ் காய்ச்சல் பரவலால் இறந்துள்ளது. பின்னர் இவர் இரண்டு உலகப் போர்கள், நிறவெறியிலிருந்து தப்பித்துள்ளார்.

இந்நிலையில், தான் நீண்ட காலம் வாழ்வதற்கு ஒரு சிறப்பு இரகசியமும் இல்லை என பிரெடி புளூம் கடந்த 2018ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார்.

தொழிலாளராக தனது வாழ்க்கையில் பெரும்பகுதியைக் களித்த பிரெடி புளூம், முதலில் பண்ணையிலும், பின்னர் கட்டுமான



தொழிற்துறையிலும் பணியாற்றியிருந்தார். தனது 80களிலேயே பிரெடி புளூம் ஓய்வு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல ஆண்டுகளுக்கு முன்னரே மது அருந்துதலை பிரெடி புளூம் கைவிட்டபோதும், அவர் தொடர்ச்சியான புகைப்பிடிப்பவராக இருந்துள்ளார். எனினும், தனது 116ஆவது பிறந்தாளில் கொவிட்-19 முடக்கம் காரணமாக பிரெடி புளூமால் சிகரெட் வாங்க முடிந்திருக்கவில்லை.

> **பல ஆண்டுகளுக்கு முன்னரே மது அருந்துதலை பிரெடி புளூம் கைவிட்டபோதும், அவர் தொடர்ச்சியான புகைப்பிடிப்பவராக இருந்துள்ளார்.**

ஜேர்மனி

### ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவருக்கு

# ஜேர்மனியில் சிகிச்சை

ரஷ்யாவின் சைபீரிய நகரமான ஓம்ஸ்கிலிருந்து அம்பியுலன்ஸ் விமானமொன்றில் மிகவும் கவலைக்கிடமான ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவரான அலெக்ஸி நேவன்லி, ஜேர்மனிக்கு மருத்துவ சிகிச்சைக்காக நேற்று முன்தினம் கொண்டு செல்லப்பட்டு ஜேர்மனியின் தலைநகர் பேர்லினிலுள்ள வைத்தியசாலையொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அலெக்ஸி நேவன்லி அனுமதிக்கப்பட்ட வைத்தியசாலையிலிருந்து அவரின் நிலை குறித்து கருத்தெதுவும் இதுவரையில் வெளிவராதபோதும் அவரின் விமானப் பயணத்தை ஒழுங்கு செய்த அமைதிக்கான சினிமான அறக்கட்டளையின் தலைவர் ஜகா பிஸில்ஜி, அவரின் நிலை மிகவும் கவலையளிப்பதாக உள்ளதாகக் கூறியுள்ளார்.

அலெக்ஸி நேவன்லியின் நட்புறவாளர்களால் நம்பப்படுகின்ற




நஞ்சு கலந்த தேநீரொன்றை அருந்திய பின்னர் விமானமொன்றில் அவர் நிலைதடுமாறி வீழ்ந்திருந்தார்.

அந்தவகையில், அலெக்ஸி நேவன்லி பறப்பதற்கு அனுமதியளித்த பின்னர் அவர் கோமாவில் வைக்கப்பட்டிருப்பதாகவும், அவருக்கு உயிருக்கு உடனடியாக ஆபத்தெதுவும் இல்லை என ஓம்ஸ்கிலுள்ள வைத்தியசாலையின் மருத்துவப் பணியாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, ஓம்ஸ்கில் அலெக்ஸி நேவன்லி பயணித்த விமானமானது அவசர தரையிறக்கமொன்றை மேற்கொண்டிருக்காவிட்டால் அவர் இறந்திருப்பார் என வைத்தியர்களிடமிருந்து தெளிவான தகவலொன்றைப் பெற்றதாக ஜகா பிஸில்ஜி தெரிவித்துள்ளார்.

அலெக்ஸி நேவன்லியை வெளியேற்றுவதற்காக அவரின் மனைவி மற்றும் நட்புறவாளர்களின் வேண்டுகோளில் கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்யாவுக்கு ஜேர்மனிய வைத்தியர்கள் சென்றிருந்த போதும் அவரின் நிலை காரணமாக அவர் பயணம் செய்ய முடியாது என ஓம்ஸ்க் வைத்தியசாலை ஆரம்பத்தில் தெரிவித்தமை காரணமாக பறப்பில் தாமதமொன்று இருந்திருந்தது.

> **அலெக்ஸி நேவன்லி பறப்பதற்கு அனுமதியளித்த பின்னர் அவர் கோமாவில் வைக்கப்பட்டிருப்பதாகவும், அவருக்கு உயிருக்கு உடனடியாக ஆபத்தெதுவும் இல்லை**

# கூஜா தூக்கும் ஜடங்களான காவடிகள்

தங்களது இனம், மொழி, சமயம் தொடர்பில் பிழையான கருத்தை முன்வைக்கும் போது எதிர்க்காதவர்களையும் சரியான கூற்றை ஆமோதிக்காதவர்களையும் "ஜடங்கள்" என்றால் தவறில்லை. இது, 9ஆவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வில் அப்பட்டமாக அரங்கேறியது.

"ஒரேநாடு-ஒரேசட்டம்" எனக் கொள்கை விளக்க உரையில் கூறியிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, தனிக்காரில் வரும்போதே, வீதியின் நடுவே இருக்கும் வெள்ளைக்கோட்டை வெட்டிவிட்டு வந்தார். ஒரே சட்டம், ராஜபக்‌ஷர்களுக்கு மட்டுமானதாக இருக்கக்கூடாதென எடுத்துரைக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, சபைக்குள் சகலருக்கும் வணக்கம் செலுத்தவில்லை; அவரது வணக்கம், பலரின் கண்களையும் உறுத்தியது. ஆனால், முன்னாள் நீதியரசர் சி.வி. விக்கினேஸ்வரனுக்கு, ஜனாதிபதி தனி வணக்கம் செலுத்தினார். எனினும், சி.வியின் வாழ்த்துரை சஜித் அணியினருக்குக் கசந்துள்ளது.

"உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ். இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ்" என விளித்து, தனதுரையை தமிழ் மொழியில் ஆரம்பித்து, ஆங்கிலத்தில் தொடர்ந்து, சிங்களத்தில் நிறைவு செய்தார் சி.வி.விக்னேஸ்ரவன்.

அவரது உரை, உத்தியோகபூர்வ அறிக்கையான ஹன்சாட்டிலிருந்து அகற்றப்பட்டது. எனினும், நேரலையில் சென்றதை மீளப்பெறமுடியாது. இங்கு, சி.வி. விக்னேஸ்வரன், எதிரணியைச் சேர்ந்தவர் அல்லது மாற்றுக்கட்சியைச் சேர்ந்தவர் என்பதை ஒதுக்குப்புறத்தில் வைத்துவிட்டு, அவரது உரையின் உண்மைக்கு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்கள், தமிழ்மொழி பேசுவோர், ஆதரவு குரல் கொடுத்திருக்கவேண்டும்.

பெரும்பான்மை இனக் கட்சிகளில் காவடியெடுத்து, எம்.பிக்களாகத் தெரிவாகியிருந்தாலும் அக்கட்சியினர் கூறுவதற்கெல்லாம் கூஜா தூக்காமல், எதிர்க்கவேண்டிய இடத்தில் எதிர்த்துநின்று, இன, மொழி, மதத்தின்பால் ஒற்றுமைக் குரலை எழுப்பியிருக்கவேண்டும்.

தங்களது எம்.பி ஒருவருக்கு நெருக்கடி ஏற்பட்டபோது, சகல முஸ்லிம் எம்.பிக்களும் ஓரணியில் திரண்டு, அரசாங்கத்துக்குப் பாடம் கற்பித்தனர். அது, இந்நாட்டுக்கு ஒரு படிப்பினையாகவும் இருந்தது என்பதை மறுக்கமுடியாது. அந்த ஒற்றுமை, தமிழ் எம்.பிக்களிடத்தில் இன்னுமே இல்லையென்பதை நினைத்து வெட்கித் தலைக்குனிய வேண்டியுள்ளது.

9ஆவது நாடாளுமன்றத்தில் தமிழ்த் தரப்புகள் பல, அங்கம் வகிக்கின்றனர். இது, அவர்களுக்குள்ளே இருக்கும் முரண்பாடுகளைத் தூண்டிவிட்டு, சபைக்குள் அவர்களிடையில் சண்டையிட்டுக்கொள்ளும் நிலைமைக்கு தள்ளிவிடலாம். அதன் வகிபாகத்தை அரசாங்கம் மட்டும்தான் செய்யவேண்டும் என்றில்லை; எதிரணியும் செய்யும்.

ஆகையால், முரண்பாடுகளையும் பிரிவினைகளையும் கைவிட்டு, பேரினவாதக் 'கசப்பு'களுக்கு காவடிகள் கூஜாதூக்காமல், உரிமைகளுக்காக ஓரணியில் நிற்பது, எதிர்காலத்துக்கு நன்மை பயக்கும்.

தமிழ்Mirror
NO 8. HUNUPITIYA CROSS ROAD, COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6, 011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER (DIR.) 011 2 479 822, 077 3421 476
CIRCULATION MANAGER (DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER (DIR.) 2 479 626, 2 479 628, 077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk

## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk




# பன்மைத்தேசியமும் இலங்கையும்



என்.கே. அஷோக்பரன்

புதிய நாடாளுமன்றத்தில், தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆரம்பமே பரபரப்பாக அமைந்திருந்தது. சீ.வி.விக்னேஸ்வரன், தமிழ் மொழியை இலங்கையின் சுதேச மொழி என்று விளித்தது, 'சிங்கள-பௌத்த' தேசியவாதிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியிருந்தது.

தமிழர்களின் நாடாளுமன்ற அரசியல் போக்கில், இது கொஞ்சம் மாறுபட்ட நிலைதான். இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, கடந்த ஒரு தசாப்த காலமளவில் இதுபோன்ற, "விரோதப்போக்குடைய பேச்சு" (*antogonising speech*) என்று, சிலர் விளிக்கக்கூடிய, பேச்சுகளைத் தவிர்த்திருந்தனர்.

ஏறத்தாழ 2,500 வருடங்கள் பழைமையான, இலங்கைத் தீவிலும் பல புலவர்களைச் சங்ககாலத்திலேயே கொண்டிருந்த ஒரு மொழியை இலங்கையின் சுதேச மொழி என்று சொல்வதில் என்ன பிழை, அது ஏன் விரோதப் போக்குடைய பேச்சு என்று விளிக்கப்பட வேண்டும் என்று, சிலர் கேள்வி எழுப்பலாம். மறுபுறத்தில், இத்தகைய பேச்சால் அடையப்பெறப்போவது என்ன?

வரலாற்றாசிரியர் கே.எம்.டி சில்வா குறிப்பிட்டபடி, "சிறுபான்மையினரின் மனநிலையைக் கொண்ட பெரும்பான்மை இனக்கூட்டமொன்றின், பாதுகாப்பின்மை உணர்வை இது அதிகரிக்காதா"? இதனால், இனவிரோதமும் குரோதமும் வளருமேயன்றி, ஆக்கம்மிகு விளைவுகள் எதுவும் ஏற்படாது என்பது, மறுசாராரின் மாற்றுக்கருத்தாகும்.

ஆனால், நாடாளுமன்ற ஜனநாயகத்தில், ஒரு விடயத்தை, நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாடாளுமன்றம் என்பது, 'மக்கள் குரல்' ஒலிக்கும் இடம். அங்கு, எந்தக் குரலும் அடக்கப்பட்டுவிடக் கூடாது. வோல்டேயர் சொன்னதாக அறியப்படும், "நீ சொல்லும் விடயத்தோடு நான் உடன்படவில்லை; ஆனால், அதைச் சொல்ல உனக்கிருக்கும் உரிமையைப் பாதுகாக்க, என் உயிரையும் தரத்தயாராக இருக்கிறேன்" என்பதுதான், பேச்சுரிமையின் அடிநாதமாக இருக்க வேண்டும். ஆக, ஒவ்வொரு பிரதிநிதியினதும் பேச்சுச் சுதந்திரம், நாடாளுமன்றம் முதல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் கூட, பாதுகாக்கப்பட வேண்டும். அதுவே ஜனநாயகமாகும்.

நிற்க! ஏறத்தாழ ஒரு தசாப்தகாலத்துக்குப் பின்னர், நாடாளுமன்றம் மீண்டிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தான் ஆற்றிய உரையில், இலங்கையை 'பன்மைத்தேசிய' (*plurinational*) அரசு என்று விளித்திருந்தார். தேசம், சுயநிர்ணயக் கோரிக்கை உள்ள நாடுகளில், பன்மைத்தேசியம் என்பது, பிரபலமாகிவருகிற ஒரு சித்தாந்தமாக இருக்கிறது.

பன்மைத்தேசியம் பற்றிய ஆய்வுகள், ஸ்கொட்லாந்து பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஸ்கொட்லாந்தின் அரசியல், சட்டத்துறை ஆய்வாளர்களான மைக்கல் கீடிங், ஸ்டீபன் டியேர்னி உள்ளிட்டவர்களின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கனவாகும். தேசியவாதச் சித்தாந்தங்களுள் நவீனமானதும் அனைத்தையும் உள்ளடக்கும் வண்ணமமைந்ததும், அதேவேளை மிகச் சிக்கலானதுமானதோர் எண்ணக்கரு, இந்தப் 'பன்மைத்தேசியம்' எனப்படுவது.

இதுபற்றி, மிகச் சுருக்கமாக ஆய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம். உலகில் ஏறக்குறைய 90%மான அரசுகளை, ஒற்றைப்படுத்தப்பட்ட (*homogenised*) தேசத்தைக் கொண்ட தேசிய அரசுகளாகக் கருத முடியாது என்று வான் டென் பேர்க் வலியுறுத்துகிறார்.

இதன் பொருள் என்னவென்றால், பெரும்பாலான அரசுகளில், ஒரு தேசிய அரசு என்ற எல்லைக்குள் சிக்கியுள்ள பல தேசங்கள் காணப்படுகின்றன. ஆனால், இது அவ்வாறு அமைந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிக்கலாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற சில நவீன தேசிய அரசுகள், அதற்கு முன்பு அங்கிருந்திராத ஒற்றைப்படுத்தப்பட்ட குடிமையையும் (*homogenised polity*), ஒற்றைப்படுத்தப்பட்ட சிவில் தேசிய அடையாளத்தையும் கட்டமைத்து, உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளன.

அதேநேரத்தில், இங்கிலாந்து, கனடா போன்ற அரசுகள், தேசிய அரசு என்ற சித்தாந்தத்தின் பிடிவாதமான கடினத்தன்மையை நெகிழவைப்பதன் மூலம், ஒரு தேசிய அரசுக்குள் அங்கு காணப்படும் பல குடிமைகளை உள்வாங்கவும் பலகுடிமைகளின் தனித்த தேச அடையாளங்களுக்கும் அரசியலுக்கும் இடமளிக்கும் முறைகளைத் தொடர்ந்து உருவாக்கி வருகின்றன.

ஆயினும்கூட, ஒற்றைப்படுத்தப்பட்ட குடிமை அல்லது, தேசம் இல்லாத நிலையில் ஒரு சிறந்த தேசிய அரசை அடைய முடியாது. அதேவேளை, பல குடிமைகளையோ தேசங்களையோ கொண்ட அரசொன்றில், ஒற்றைப்படுத்தப்பட்ட தேசமொன்றைக் கட்டியெழுப்புதல் பற்றிக் கருத்துரைக்கும் ஸ்டீபன் டியேர்னி, 'ஒற்றைப்படுத்தலை, பல குடிமைகள் கொண்ட அரசுக்குள் முயற்சிக்கும்போது, ஆதிக்க குடிமைகளின் நடைமுறைகள், உத்திகள் (உத்தியோகபூர்வ மாநில மொழியின் பரப்புதல் போன்றவை) அரசமைப்புக் கொள்கைகளை வடிவமைக்கும் போது, துணை அரசு தேசிய சமூகங்கள் ஓரங்கட்டப்படலாம். அது, அரசின் மய்யத்தைத் தீர்மானிக்கும் குடிமையின் நலன்களை (அதன் மேலாதிக்க சமுதாயத்தை) முன்னிறுத்துவதாக அமையும் என்கிறார். பிரான்ஸ் என்ற தேசிய அரசின் உருவாக்க வரலாற்றைப்பார்த்தால், டியேர்னி கூறும் கருத்தின் அர்த்தம் புலப்படும்.

பிராந்திய மொழி, கலாசாரம் என்பவை ஓரங்கட்டப்பட்ட, முழு நாட்டுக்கும் ஒரு மொழி; ஒரு கல்வி என்று இரும்புக் கரம்கொண்டு பிராந்திய மொழிகளும் கலாசாரமும் ஓரங்கட்டப்பட்டே பிரான்ஸ் என்ற சிவில் தேசிய அரசு கட்டமைக்கப்பட்டது.

சிவில் தேசமல்லாது, இனத்தேசிய அரசியல் வேர்விட்டுள்ள அரசொன்றில், ஒற்றைப்படுத்தப்பட்ட தேசிய அரசொன்றைக் கட்டியெழுப்புதலானது, எப்போதுமே ஆதிக்கம் மிக்க பெரும்பான்மை இனத்தேசியத்தின் நலன்களைக் காப்பதாகவும் சிறுபான்மை இனத் தேசியங்களின் நலன்களைச் சவாலுக்கு உட்படுத்துவதாகவும் அமையும்.

மறுபுறத்தில், ஒவ்வொரு தேசத்துக்கும் ஒவ்வொரு தனி அரசு என்பது, நடைமுறைச்சாத்தியம் இல்லாத கனவு. இந்த இடத்தில்தான், ஓர் அரசுக்குள் பல தேசங்களை உள்ளடக்கும் உபாயத்தை, பன்மைத்தேசிய சித்தாந்தம் முன்மொழிந்து நிற்கிறது.

பன்மைத்தேசியம் என்பதை வரையறுக்கும் மைக்கல் கீடிங், "பன்மைத் தேசியம் என்பது, பல்தேசியத்தை விடவும் அதிகமானது. பல்தேசியம் என்பது, ஒரு குடிமைக்குள் தனித்துவமானதும் தனித்தனி தேசிய குழுக்களின் சகவாழ்வைக் குறிப்பதுமாகும். பன்மைத்தேசியத்தின் கீழ், ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய அடையாளங்கள், ஒரு குழு அல்லது ஒரு தனிநபருக்கு கூட பொருந்தக்கூடும். இது பன்மையான தேசிய இனங்களின் சாத்தியத்தைத் திறக்கிறது, அவை கூடுகட்டப்படலாம்; அல்லது, குறைந்த நேர்த்தியான வழிகளில் ஒன்றுடன் ஒன்று மேவியும் அமையலாம்" என்கிறார்.

ஆகவே, பன்மைத்தேசியம் என்ற கருத்து, வெறுமனே ஓர் அரசுக்குள், பல தனித்துவமான தேசங்கள் அனுமதிக்கப்படல் என்பது மட்டுமல்ல; அத்தோடு, பல அடுக்குகள் கொண்டதும் ஒன்றுடன் ஒன்று மேவிய அரசும் துணைஅரசும் தேசிய அடையாளங்களைப் பல-குடிமை அரசியலுக்குள் கொண்டுள்ளமையை இது குறிக்கும்.


இலங்கைச் சூழலில், இதன் பொருளானது, ஒரு நபர் இலங்கையின் தேசிய அடையாளத்தை அல்லது, தமிழ் அல்லது சிங்கள துணை அரசுத் தேசிய அடையாளத்தை மட்டுமே கடைப்பிடிக்கலாம் அல்லது அரசும் துணை அரசும் தேசிய அடையாளங்களைச் சமமாகப் பின்பற்றலாம்; அல்லது, ஒவ்வோர் அடையாளத்துக்கும் வேறுபட்ட நிறையை வழங்கலாம். சுருங்கக் கூறின், ஒருவர் தனது தேசிய அடையாளத்தை இலங்கையராக மட்டும் கொண்டிருக்கலாம். அல்லது தமிழராகவோ சிங்களவராகவோ கொண்டிருக்கலாம். அல்லது இலங்கைத் தமிழராகவோ இலங்கைச் சிங்களவராகவோ கொண்டிருக்கலாம். அல்லது தமிழ் இலங்கையராகவோ, சிங்கள இலங்கையராகவோ கொண்டிருக்கலாம். ஆக, இலங்கை என்ற அரசுக்குள் பல தேசங்கள் உள்ளடங்குவது மட்டுமன்றி, ஒன்றோடொன்று மேவியமைந்த அரசு மற்றும் துணையரசுத் தேசிய அடையாளங்களைக் கொண்டிருக்கும் இயலுமையை பன்மைத்தேசியம் உருவாக்குகிறது.

ஆழமாக யோசித்துப்பார்த்தால், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்குச் சாத்தியமான வழிகளுள் முக்கியமானதாக, பன்மைத்தேசியம் அரசொன்றைக் கட்டியெழுப்புவது அமையும். இந்தநாட்டின்பெரும்பான்மை மக்கள் பிரிவினையை (*secession*) எதிர்க்கிறார்கள், மறுக்கிறார்கள். அதாவது, இலங்கைத் தீவுக்குள் இன்னொரு தனியரசு உருவாவதை, இங்கு வாழும் பெரும்பான்மை மக்கள் ஏற்கவில்லை. மறுபுறத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்பது தேசம், தாயகம், சுயநிர்ணயம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஒரு பன்மைத்தேசிய அரசுக்குள் இந்த இருதரப்பின் விருப்பங்களையும் உள்ளடக்க முடியும். இலங்கை ஓர் அரசாகவே இருக்கும்; ஆனால், அதற்குள் பன்மைத் தேசங்களும் குடிமைகளும் அவற்றுக்குரிய அங்கிகாரம், உரிமைகளுடன் காணப்படும். ஆகவே, சித்தாந்த ரீதியில் இலங்கைக்கு பன்மைத்தேசியவாதமே மிகப்பொருத்தமானதாகும்.

பன்மைத்தேசியம் என்பது தீவிரவாதமல்ல; பன்மைத்தேசியவாதத்தைவிட, இன்னொரு சமரசமான மாற்று, இலங்கைக்குக் கிடைப்பது அரிது.

இது ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் பெரும்பான்மை இனத் தேசிய ஆதிக்க அரசியலின் பிடியில் சிக்கியுள்ள இலங்கையின் ஆட்சியானது, பெரும்பான்மை இனத் தேசிய அரசியல் சித்தாந்தத்தைத் தாண்டி சிந்திக்கத்தக்கதா என்ற கேள்வி யதார்த்தத்தில் முக்கியமானது. இந்தப் பெரும்பான்மை இனத் தேசிய அரசியல், எப்படி சமஷ்டியை பிரிவினைவாதமாக வரையறுத்துப் பிரசாரம் செய்து, மக்கள் மனங்களில் அதனை ஒரு சொல்லத்தகாத தூசணவார்த்தை போலவே பதியவைத்துவிட்டதோ, அதைப்போலவே பன்மைத்தேசியவாதத்தையும் செய்துவிடலாம்.

ஆனால், இந்த அரசியல் ஊடாட்டங்களுக்கு அப்பால், இலங்கை அரசையும் அதன் மக்களையும் வரையறுப்பதற்கு, பன்மைத்தேசியத்தைவிட மிகப்பொருத்தமானதோர் அடையாளம் இன்னும் இல்லை என்பதுதான் உண்மை.



## வாழ்வியல் தரிசனம்

இருளில் மாந்தர்கள் மறைந்து போகின்றார்கள். ஒளியில் இவர்கள் நிமிர்ந்து நிற்கின்றார்கள்.

இருள் என்பது மயக்கம்; மாயையின் வடிவம்; ஆணவத்தின் சொரூபம். ஒளி என்பது ஞானத்தின் தேடல். இதைத் தேடுவதற்குக் காலம், கல்வி, பொறுமை, மெய்அறிவு என்பவை முக்கியமாகும். எதையும் ஆன்மா நம்பும். பின்பு அதை வெறுக்கும். நிரந்தரமாக மனிதன், சீரான எண்ணங்களுடன் இல்லை. தம்மை வைத்தே, உலகை அளக்கிறார்கள்.

மாறிமாறித் தோற்றங்கள் காட்டும் பலவீனமானவர்கள், தங்கள் குறைகளை ஒளித்து வைத்திருக்கிறார்கள். அகண்ட உலகில் எதைத் தேடுவது, எதை முழுமையாக அறிவது?

ஏற்றுக் கொள்வதற்கும் மறுப்பதற்கும் பொறுப்பதற்கும் வழி தெரியாத மாந்தர்களிடையே, நல்லோர்கள் மறைந்து நிற்கிறார்கள். ஞானத்துக்கு உருவம் இல்லை. கறை அற்றவர்கள் கண்டு கொள்வார்களா?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஓபாத்த தோட்டத்துக்கும் பாடசாலைக்கும் குடிநீர் இல்லை

இரத்தினபுரி, கொடகவெல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஓபாத்த இரண்டாம் பிரிவு தோட்டத்துக்கும் இ/எம்பி/ இல 02 தமிழ் வித்தியாலயத்துக்கும் பல வருடங்களாகக் குடிநீர் இல்லாமையால், தோட்ட மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள்.

ஓபாத்த தோட்டத்தில், 1,000க்கும் மேற்பட்டோர் வாழ்கிறார்கள். இவர்கள், அங்குள்ள இறப்பர் தோட்டத்தின் வாய்க்காலில் வரும் ஊற்று நீரையே, பாவனைக்காக எடுக்கின்றார்கள். இவ்வாறு, பெறப்படும் நீர், தோட்டத்திலுள்ள 150 குடும்பங்களுக்கும் போதுமானதாக இல்லை.

அரசியல்வாதிகள் பலர், தேர்தல் காலங்களில் வந்து வாக்குறுதிகள் அளித்தார்கள் என்றும் ஆனால், எந்த அரசியல்வாதியும் குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவில்லை என்றார்கள்.

ஒபாத்த வித்தியாலயத்தின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் இணைந்து சில வருடங்களுக்கு முன், பாடசாலப் பாவனைக்கு குடிநீர் எடுப்பதற்காக கிணறு தோண்டியதாகவும் சில மாதங்களுக்கு பின்னர், கிணற்று நீர் வற்றிவிட்டதாகவும் ஆசிரியர்கள் கூறினார்கள். பாடசாலைக்கு வரும் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் குடிநீர் இல்லாமல் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதைச் சகிக்க முடியாத ஓபாத்த தோட்ட மக்கள், வாய்க்காலில் தாம் சேமிக்கும் ஊற்று நீரையே, பாடசாலை பாவனைக்காக வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாய்க்கால் ஒன்றில், சேமித்து வைத்து எடுக்கும் ஊற்று நீர் சுத்தமற்றதால் தோட்ட மக்களுக்கும் பாடசாலை பிள்ளைகளுக்கும் நோய்கள் ஏற்படலாம் என்றும் விரைவில் பாடசாலையினுடையதும் தோட்டத்தினுடையதுமான குடிநீர் பிரச்சினையை, சீர்செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

–க. மஹிந்த தி

## வாராந்த பங்கு சந்தை நிலைவரம்



**17.08.2020 - 21.08.2020**

**17.08.2020**

டயலொக் அக்சியாடா, ஹற்றன் நஷனல் வங்கி, ஹேலீஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் மறை பெறுமதிகளைப் பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.6 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு கொமர்ஷல் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், சம்பத் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு ஹற்றன் நஷனல் வங்கி, டயலொக் அக்சியாடா, DFCC வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு ஃபர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ், ஹற்றன் நஷனல் வங்கி வாக்குரிமையற்ற பங்குகள் மீது பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

**18.08.2020**

LOLC ஹோல்டிங்ஸ், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், சிலோன் டொபாக்கோ கம்பனி ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளைப் பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.7 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு கொமர்ஷல் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ், டயலொக் அக்சியாடா பங்குகள் மீது பதிவாகியிருந்தன. கலப்பு ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், DFCC வங்கி ஆகிய பங்குகள் மீது பதிவாகியிருந்தன. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு பர்ஸ்ட் கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ், ஹேலீஸ் ஃபப்ரிக் பங்குகள் மீது பதிவாகியிருந்தன. வெளிநாட்டவர்களின் ஈடுபாடு குறைந்தவில் பதிவாகியிருந்ததுடன், பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

**19.08.2020**

பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், LOLC ஹோல்டிங்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளைப் பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 3.8 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு அக்சஸ் என்ஜினியரிங், லயன் பிரெவரி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. கலப்பு ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ், எக்ஸ்போ லங்கா ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.


**20.08.2020**


கொமர்ஷல் லீசிங் அன்ட் ஃபினான்ஸ், சிலோன் டொபாக்கோ கம்பனி, சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளைப் பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 2.0 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு சென்ரல் ஃபினான்ஸ், பீப்பள்ஸ் லீசிங் கம்பனி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. கலப்பு ஈடுபாடு LOLC ஹோல்டிங்ஸ், DFCC வங்கி, கொமர்ஷல் வங்கி பங்குகள் மீது பதிவாகியிருந்தது. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு ஹேலீஸ் ஃபப்ரிக், அக்சஸ் என்ஜினியரிங், பிரவுண்ஸ் இன்வெஸ்ட்மன்ட்ஸ் ஆகிய பங்குகள் மீது பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் ஈடுபாடு பங்குகள் விற்பனையில் குறைந்தளவில் பதிவாகியிருந்தது.

**21.08.2020**

லயன் பிரெவரி, டிஸ்டிலரீஸ், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் ஆகிய பங்குகளின் பங்களிப்புடன் சுட்டிகள் நேர் பெறுமதிகளைப் பதிவு செய்திருந்தன. புரள்வு ரூ. 1.8 பில்லியனாகப் பதிவாகியிருந்தது. தேறிய உயர் பெறுமதி வாய்ந்த நிறுவனசார் ஈடுபாடு சம்பத் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. கலப்பு ஈடுபாடு DFCC வங்கி, LOLC ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு அக்சஸ் என்ஜினியரிங், டிப்ட் புரொடக்ட்ஸ், ஹேலீஸ் ஃபப்ரிக் பங்குகள் மீது பதிவாகியிருந்தது. வெளிநாட்டவர்கள் பங்கு விற்பனையில் குறைந்தளவில் ஈடுபட்டனர்.

வாரத்தில் அபவிசு 2.29% உயர்வையும் S&P SL20 3.19% உயர்வையும் பதிவு செய்திருந்ததுடன், சராசரி தினசரி புரள்வு 2.2 பில்லியன் ரூபாயாகப் பதிவாகியிருந்தது.




# இலங்கையின் பொருளாதார எதிர்காலம் என்ன?



அனுதினன் சுதந்திரநாதன்

2020ஆம் ஆண்டில், இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் மிகப்பெரும் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது. 2019ஆம் ஆண்டின் இறுதியில், நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்பு, நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையுடன் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன, நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி இருக்கிறது. இந்த வெற்றி, அரசியல் ரீதியாக மிகப்பெரும் மாற்றமாகப் பார்க்கப்பட்டாலும், ஒட்டுமொத்த இலங்கையின் பொருளாதார நிலையில், எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவர இருக்கிறது என்பதும் பலரது எதிர்பார்ப்பாக மாறியிருக்கிறது.



2020ஆம் ஆண்டுக்கென, ஒரு நிரந்தர வரவு-செலவு திட்டத்தை, இலங்கை கொண்டிராத நிலையில், தற்காலிகமாகச் சமர்ப்பிக்கப்படும் பாதீட்டின் மூலமாகவே, இதுவரை அரசாங்கத்தை நடத்தி வந்திருக்கிறது. தற்போது 2020ஆம் ஆண்டுக்கும், 2021ஆம் ஆண்டுக்குமான முழுமையான வரவு-செலவுத் திட்டத்தை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் முதல்வேலை, புதிய நிதி அமைச்சின் கைகளில் இருக்கிறது. ஆனால், கடந்த பெப்ரவரி மாதத்தில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில், மஹிந்த ராஜபக்ஷவால் நல்லாட்சி அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட 2020க்கான தற்காலிக பாதீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த 721 பில்லியன் ரூபாய் கடன் பெறுகின்ற எல்லையை 1,088 பில்லியன் ரூபாயாக அதிகரிக்கும்படி கேட்டிருந்தார்கள். ஆனால், மக்களின் பொருளாதாரச் சுமை அதிகரிக்கும் என்கின்ற நிலையில், அதை அனைத்துக் கட்சிகளும் எதிர்த்திருந்தன.

எனவே, கொரோனா வைரஸ் பரவுகையை இதற்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, இன்னுமொரு தற்காலிக பாதீட்டை அரசாங்கம் நிறைவேற்றியிருந்தது. இதன் மூலம், இந்த ஆண்டில் முதல் காலாண்டில் மட்டும், இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொள்ளக் கூடிய கடனின் அளவு, 1,088 பில்லியன் ரூபாயாக மாறியதுடன், அதை இலங்கை அரசாங்கமும் பெற்றுக்கொண்டுள்ளது.

எனவே, 2020ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது, துண்டு விழும் தொகையின் அளவானது மிக அதிகளவில் இருக்கும். இது மக்கள் மத்தியில், புதிய நாடாளுமன்றத்துக்கு ஓர் அவப்பெயரை ஏற்படுத்த கூடுமென்கிற நோக்கில், மற்றுமொரு தற்காலிகப் பாதீட்டை, இலங்கை அரசாங்கம் கொண்டுவர இருக்கிறது. இது, 1,600 திரில்லியன் ரூபாய் செலவீனங்களைக் கொண்ட தற்காலிக வரவு-செலவுத் திட்டமாக இருக்கப்போகிறது.

இதன்மூலமாக, முடங்கி கிடக்கும் பொருளாதாரத்துக்குத் தேவையான நிதி உட்பாய்ச்சலைச் செய்வதற்கு எதிர்பார்ப்பதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. ஆனால், இந்தத் தற்காலிக வரவு-செலவு திட்டத்தை முழுமையாகப் பார்க்கின்றபோது, நிகழ்ச்சி நிரல் வேறுவிதமாக இருக்கிறது.

இந்தத் தற்காலிக வரவு-செலவுத் திட்டத்தில், 200 பில்லியன் ரூபாயை கடந்த ஒரு வருடமாக கட்டி முடிக்கப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் கட்டட நிர்மாணங்களுடன் தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு வழங்க இருக்கிறது. இதில், சுமார் 15 பில்லியன் ரூபாய் பாடசாலைகள் சார்ந்த அபிவிருத்தியுடன் தொடர்புபட்டதாக இருக்கிறது.

இதைத் தவிர்த்து, பெருமளவான தொகை இந்த வருடத்தில் மீளச் செலுத்தவேண்டிய கடன்களுக்கும் மிக விரைவாக மக்களின் கண்துடைப்பாகச் செய்யப்படவிருக்கும் வீதி அபிவிருத்தி, மின்சாரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் செலவிடப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வெளிப்படையாகச் சொல்லப்படின், அரசாங்கத்தின் நேரடிப் பங்குதாரர்களாக இருக்கும் முகவர்கள், வழங்குநர்கள், ஆதரவாளர்களை மிக விரைவாகத் திருப்திப்படுத்த வேண்டிய தேவையொன்று தற்போதைய அரசாங்கத்துக்கு உருவாகியிருக்கிறது. எனவேதான், தற்காலிக பாதீட்டுக்கு பொருத்தமான அளவு பணம் இல்லாதபோதிலும், இந்தப் பெருந்தொகையை அச்சிட்டாவது வழங்க வேண்டுமென்கிற அளவில் அரசாங்கம் செயற்படத் தயாராகி வருகிறது.

இதுவரை, பில்லியன் கணக்கான பணத்தை இந்த ஆண்டில் மாத்திரம் புதிய அரசாங்கம் அச்சிட்டு இருக்கிறது. அதற்குச் சமமான வெளிநாட்டு வருமானம் இல்லாதநிலையில், மிகவிரைவாகவே பணவீக்க நிலையொன்றை எதிர்கொள்ள இருக்கிறோம் என்பதே உண்மை.

இந்த, 1,600 திரில்லியன் ரூபாய் பாதீடானது, நேரடியாகப் பொருளாதார செயற்பாடுகளில் போதுமான தாக்கத்தைச் செலுத்தாத போதிலும், வங்கிகளின் மூலமாகப் பொருளாதாரத்தை முன்னெடுக்கக்கூடிய வகையிலான கடன்களை வழங்கவும் அதன் மூலமாகக் காசுப் பாய்ச்சலை உருவாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை மறுசீரமைக்க முடியுமெனவும் சமூர்த்தி, நுண்நிதியியலுக்குப் பொறுப்பான அமைச்சர் கருத்தை வெளியிட்டு இருக்கிறார்.

கொரோனா வைரஸ் காரணமாக, இலங்கையின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்திருக்கிறோம். சுமார் மூன்று மாதங்கள், இலங்கை முழுமையாக இயங்காத நிலையிலும், அதைத் தொடர்ந்து நடைமுறைகளில் மாற்றம் வந்தபோதிலும், மிகச்சில துறைசார்ந்த செயற்பாடுகளே முழுமையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால், பொருளாதார ரீதியாக மிகப்பெரும் பிரச்சினைகளை அனைத்து வணிகங்களுமே எதிர்கொண்டுள்ளன. இதற்கு உடனடித் தீர்வாக, கோட்டாபய ராஜபக்ஷவால் முன்மொழியப்பட்ட ஒன்றுதான் இலங்கை மத்திய வங்கி வணிகங்களுக்கு இலகுகடனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகும். இந்தப் பேச்சுவார்த்தையிலேயே ஜனாதிபதிக்கும் - இலங்கை மத்திய வங்கியின் பிரதிநிதிகளுக்கும் முரண்பாடு ஒன்று ஏற்பட்டிருந்தது.

ஜனாதிபதி குறிப்பிடுவதுபோல, கடனை வழங்குவதற்குப் போதிய பணமில்லாத சூழ்நிலையில், அதை அச்சிட்டு வழங்க வேண்டிய நிலைக்கே மத்திய வங்கி தள்ளப்பட்டிருந்தது. ஆனால், வேறுவழியின்றி ஜனாதிபதியின் முன்மொழிவை ஏற்றுக்கொண்டு, செயற்பட வேண்டிய நிலைக்கு, மத்திய வங்கி ஆளாகி இருக்கிறது.

இதுவரை மாத்திரம், இலங்கை மத்திய வங்கி 36,489 கடன் கோரல்களை அனுமதித்து அவர்களுக்கு 100,017 மில்லியன் ரூபாய் அளவிலான கடனை வழங்கி இருக்கிறது. இதில் பூச்சிய வட்டிவீத கடன்களும் மிகக்குறைந்த வட்டிவீத கடனையும் கொண்டிருக்கிறது. இந்த மொத்தக் கடன்தொகையில் 68.5 பில்லியன் ரூபாய் இதுவரை முழுமையாக வழங்கி முடிக்கப்பட்டிருப்பதுடன், மிகுதி இரண்டாம் கட்டமாக, விநியோகம் செய்யப்படுவதாகவும் அறிவித்திருக்கிறது.

தற்காலிக பாதீட்டிலும் ஒரு சிறுபகுதி கடன் வழங்கலுக்கு ஒதுக்கப்படும் சந்தர்ப்பம் இருப்பதன் காரணமாக, குறைந்த வட்டியில் தொழிற்படு மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்பதற்கான கால எல்லையை, செப்டெம்பர் 30ஆம் திகதி வரை அதிகரித்து இருக்கிறது.

இந்தச் சூழ்நிலைகள், இலங்கை அரசாங்கம் போதிய வருமானம், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கொண்டிராத நிலையில் மேற்கொண்டு வரும் திட்டங்களாக இருக்கின்றன. ஒருவகையில், இத்தகைய திட்டங்கள் தவிர்க்கப்பட முடியாதவை என்கிற நிலையிருந்தாலும், இவற்றை எல்லை மீறி நடைமுறைப்படுத்துவதென்பது, நாட்டின் பொருளாதாரச் சூழலுக்கு மிகப்பெரும் பாதகமாக அமையவுள்ளது என்பதே, எல்லோரினதும் குற்றச்சாட்டாகவும் எதிர்வு கூறலுமாக இருக்கிறது.

இந்த ஆண்டுக்காக, சர்வதேச நாணய நிதியத்திலிருந்து வரவேண்டிய சுமார் 1,000 மில்லியன் ரூபாய் அமெரிக்க டொலர், இன்னமும் இலங்கைக்கு வந்து சேரவில்லை. இலங்கைக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் எவையும் இவ்வாண்டில் நிறைவேற்றப்படாத நிலையில், இந்தத் தொகை இலங்கைக்குக் கிடைப்பது கேள்விக்குறியாகியுள்ளது. இதனால், விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் ஒரு பகுதியை நிறைவேற்றி, முதற்கட்டமாக 800 மில்லியன் ரூபாய் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்ளவும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது.

இவை அனைத்துமே, இலங்கைக்குள் வெளிநாட்டு நாணயங்களை வருமானமாகவோ, கடனாகவோ கொண்டு வருவதன் மூலமாக, பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்தும் குறுங்கால நோக்கத்தைக் கொண்டிருக்கிறது.

இவற்றுக்கு மேலாக, 2015ஆம் ஆண்டிலிருந்து, இலங்கையின் வருமானவரி திணைக்களம் மிகப்பெரும் வருமானம் ஒன்றைத் தவறவிட்ட நிறுவனமாகத் தனித்து நிற்கிறது. 2015ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை, இந்தத் திணைக்களத்துக்கு வரவேண்டிய சுமார் 3 பில்லியன் ரூபாய் வருமானம் இன்னும் வந்து சேரவில்லை என்கிற தகவல் வெளிவந்திருக்கிறது.

உள்நாட்டில் பெரும்பாலான வரி செலுத்துநர்கள், வருமான வரி திணைக்களத்துக்கு காசோலைகள் மூலமாகவே வருமானத்தைச் செலுத்தி வருகிறார்கள். இதில் இதுவரை 8,060 காசோலைகள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு, பணமில்லை என மீள அனுப்பப்பட்டவையாக இருக்கின்றன. இவற்றின் மொத்த தொகையே 3 பில்லியன் ரூபாயாக இருக்கிறது.

இதுவரை, இந்த வரிகளைச் செலுத்தாதவர்கள் விவரம்வெளிவராத நிலையிலும், குறிப்பிட்ட சில வரி செலுத்தும் நிறுவனங்கள், தனிநபர்கள் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவும் நாட்டின் வருமானத்தில் மிகப்பெரும் குறைவை ஏற்படுத்தியுள்ளது. வருமானம் இல்லாத நிலையில், அரச இயந்திரங்களின் இத்தகைய வினைதிறனற்ற நிலையும் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் இக்கட்டுக்குள் தள்ளி இருக்கிறது.

இதிலிருந்து மீட்சி பெறுவதென்பது எதிர்வரும் காலங்களில் மிகப்பெரும் சவாலாக இருக்கப் போவதுடன், இந்தப் புதிய அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான பொருளாதார செயற்பாடுகளும் சாமனிய பொதுமக்களைப் பாதிக்கப்போகின்ற நிலையை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கிறது என்பது கவலை தருவதாக இருக்கிறது.





ஐஸ்வர்யா ராஜேஷின்

# ‘பூமிகா’



பிரபல நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ், 2010ஆம் ஆண்டில் “நீதான் அவன்” என்ற திரைப்படத்தில் நடிகையாக அறிமுகமாகி, கடந்த 10 ஆண்டுகளில், 25 திரைப்படங்கள் என்ற மைல்கல்லைத் தொட்டுள்ளார்.

இந்த நிலையில், ஐஸ்வர்யா ராஜேஷின் 25ஆவது திரைப்படத்தின் பெயர் “பூமிகா” என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ் தயாரிப்பில், ரவீந்திரன் பிரசாத் இயக்கத்தில் உருவாகவுள்ள இத்திரைப்படத்தில், பிரித்வி சந்திரசேகர் இசை அமைக்கிறார்.

ராபர்ட்டோ ஜாஜ்ரா என்பவரின் ஒளிப்பதிவில் ஆனந்த் ஜெரால்டின் என்பவரின் படத்தொகுப்பில் உருவாகும் இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு, லொக்டவுன் முடிந்தவுடன் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சமந்தாவின் பயம்

கொரோனா வைரஸ் தொற்று பரவல் ஊரடங்கு காரணமாக, திரைப்படத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. படப்பிடிப்பு இல்லாத காரணத்தால் நடிகர், நடிகைகள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர்.

பலர் சமூக வலைத்தளங்களில் புகைப்படங்கள் மற்றும் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர். இந்நிலையில், நடிகை சமந்தா பேட்டி அளித்தபோது கூறியதாவது,

“கவர்ச்சியாக நடித்தால் அதற்குதான் பொருத்தம் என்று முத்திரை குத்தி விடுவார்கள். நான் வந்த புதிதில் வணிக படங்களில் நடித்தேன். கடவுள் அருளால் அவை வித்தியாசமான கதைகளாகவும் நடிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் கதாபாத்திரங்களாகவும் அமைந்தன.

எனக்கு வில்லியாக நடிக்க ஆர்வம் உள்ளது. “பேமிலி மேன்” என்ற வெப் தொடரில், வில்லி வேடம் கிடைத்துள்ளது. இது எனது கனவு கதாபாத்திரம் ஆகும். திருமணம் ஆனபிறகும் எனக்கு வித்தியாசமான கதைகளும் இரசிகர்கள் பாராட்டும் கிடைக்கின்றன. நான், நாகார்ஜுனா வீட்டு மருமகள். அவர் குடும்பத்து பெயர் என்னால் கெடக்கூடாது என்று கதைகளை கவனமாகத் தேர்வு செய்கிறேன்.

இப்போது சவாலான கதாபாத்திரங்களில் நடிக்க ஆர்வமாக இருக்கிறேன். அந்த மாதிரி கதாபாத்திரம் எனக்கு வரும்போது இதை என்னால் செய்ய முடியுமா, முடியாதா என்ற பயம் எனக்குள் ஏற்பட வேண்டும்.

அப்படி பயம் இருந்தால்தான் இன்னும் கவனமாக அந்தக் கதாபாத்திரத்தை செய்ய முடியும். சமீபத்தில் எனக்கு நல்ல கதைகள், கதாபாத்திரங்கள் வருவதற்கு காரணம் இந்தப் பயம்தான்” என்று சமந்தா கூறினார்.



# கங்கனாவின் அடுத்த அதிர்ச்சி

நடிகர் சுஷாந்த் சிங்கின் தற்கொலைக்குப் பின்னர், பல சர்ச்சைகள் அடுத்தடுத்து வெளிவர ஆரம்பித்துள்ளன. மேலும், சுஷாந்தின் தற்கொலைக்கு ஹிந்தி திரையுலகில் இருக்கும் வாரிசு நடிகர்களின் ஆதிக்கம் தான் காரணம் என்று, நடிகை கங்கனா ரனாவத் பரபரப்புக் குற்றம் சுமத்தியிருந்தார்.

மேலும், நடிகர் சுஷாந்த் சிங்கின் காதலியான ரியா சக்கரவர்த்தியையும் சாடியிருந்த கங்கனா, தற்போது சுஷாந்தின் மற்றொரு காதல், தனக்கும் ஹிருத்திக் ரோஷனுக்கும் இடையே இருந்த காதல் குறித்து பேசியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் பதிவு செய்துள்ள டுவிட் பதிவில், “ சுஷாந்த் சிங் மற்றும் சாரா அலிகான் காதல் குறித்து ஏற்கெனவே ஊடகங்களில் தகவல் வந்தது. இங்குள்ள நட்சத்திரங்களின் குழந்தைகள், வெளியே இருந்து வரும் நடிகர்களை ஆசை வலையில் விழ வைத்து, பின்னர் அம்போவென விட்டுவிடுகின்றனர்.

“சுஷாந்த் சிங்கை சாரா உண்மையாகக் காதலித்து இருக்கலாம். சாராவுக்கு ஏற்பட்ட அழுத்தம் காரணமாகவும் அவர் விலகி சென்றிருக்கலாம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், “ஹிருத்திக் ரோஷனை நானும் உண்மையாகக் காதலித்து இருந்தேன். எதற்காக என்னிடம் எதிரிபோல அவர் மாறினார் என்பது இன்றளவும் எனக்கு மர்மமாகவே இருக்கிறது” என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

வாணி போஜனின்

# ‘தாழ் திறவா’



நடிகை வாணி போஜன், “ஓ மை கடவுளே” என்ற திரைப்படத்தின் மூலம் வெள்ளித்திரையில் அறிமுகமானார். இந்த நிலையில் தற்போது அவர் நடிக்கவுள்ள அடுத்தத் திரைப்படம் குறித்த தகவல் வெளிவந்துள்ளது.

இந்தத் திரைப்படத்தின் டைட்டில் “தாழ் திறவா” என வைக்கப்பட்டுள்ளது. இந்தத் திரைப்படத்தின் டைட்டில் போஸ்டரை நடிகை ஆண்ட்ரியா தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ளார். இந்தத் திரைப்படத்தை, பரணி சேகரன் என்ற அறிமுக இயக்குநர் இயக்க உள்ளார்.

பூமிக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள ஒரு பிரச்சினையைத் தீர்த்து வைப்பதே, இந்தத் திரைப்படத்தின் கதை என்றும் வழக்கமான திரில்லர் திரைப்படம் போல் இருக்காமல், இது வித்தியாசமான திரைப்படமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாணி போஜனின் கதாபாத்திரம் மிகவும் வித்தியாசமானது என்றும் அவரது கதாபாத்திரத்தைச் சுற்றியே, இந்தத் திரைப்படத்தின் முழு கதையும் அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.



# பார்சிலோனாவில் இருக்க விரும்பும் சுவாரஸ்

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவில் இருக்க விரும்புவதாக, அக்கழகத்தின் முன்கள வீரரான லூயிஸ் சுவாரஸ் தெரிவித்துள்ளார். இப்பருவகாலத்தில் பார்சிலோனாக் குழாமானது மாற்றங்களுக்கு உள்ளாகும் என, அக்கழகத்தின் தலைவர் ஜோஸெப் மரியா பார்டொமு கடந்த வாரம் தெரிவித்திருந்த நிலையில், அது சில பார்சிலோனாவின் நட்சத்திர வீரர்களுக்குப் பிரியாவிடையை வழங்குவதாகக் காணப்பட்டிருந்தது.

பார்சிலோனாவின் அணித்தலைவரான லியனல் மெஸ்ஸி உள்ளிட்ட சில வீரர்களை, கழகத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படாத வீரர்கள் எனப் பெயரிட்டிருந்த ஜொஸெப் மரியா பார்டொமு, பார்சிலோனாவுடன் அடுத்தாண்டு வரை ஒப்பந்தமொன்றைக் கொண்டிருக்கின்ற 33 வயதான லூயிஸ் சுவாரஸை பெயரிட்டிருக்கவில்லை.

இந்நிலையிலேயே, தான் வெளியேற பார்சிலோனா விரும்புகின்றதா என நேரடியாக கழகத்தைக் கூறுமாறு லூயிஸ் சுவாரஸ் கூறியுள்ளதுடன், அதுவரையில் கழகத்தில் தனது எதிர்காலத்துக்காகப் போராடுவேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜொஸெப் மரியா பார்டொமுவால் குறிப்பிடப்பட்ட பெயர்கள், இடம்பெறக்கூடிய மாற்றங்கள் பற்றிக் கதைக்கப்படுவதாகவும், ஆனால் கழகத்திலிருந்து வெளியேற வேண்டும் என கழகத்திலுள்ள எவரும் தன்னிடம் கூறவில்லை என லூயிஸ் சுவாரஸ் தெரிவித்துள்ளார். மேலும், தான் விளையாடும் காலத்தில் மாற்றுவீரராக இருப்பதைத் தான் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அடுத்த பருவகாலத்தில் தான் அங்கிருந்தாலும் தனக்கு எந்தவிதப் பிரச்சினையுமில்லை என்றும், லூயிஸ் சுவாரஸ் கூறியுள்ளார்.



# இங்கிலாந்துத் தொடருக்காக பயணமாகும் அவுஸ்திரேலியா

இவ்வாண்டு மார்சுக்குப் பிறகு அவுஸ்திரேலியா முழுவதுமிலிருந்து இணைந்திருந்த குழாமானது, இங்கிலாந்துக்கு பேர்த்திலிருந்து நேற்றுப் புறப்பட்டிருந்தது.

இங்கிலாந்துக்கெதிரான அவுஸ்திரேலியாவின் சுற்றுப்பயணமானது மூன்று இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளையும், மூன்று ஒருநாள் சர்வதேசப் போட்டிகளையும் உள்ளடக்கியவாறு காணப்படுகின்றது.

இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில், அவுஸ்திரேலியாவானது ஒன்பதை வென்று பலமானதாகக் காணப்படுகின்ற நிலையில், தமது ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியை மெருகூட்டக் காத்திருக்கின்றது.

அவுஸ்திரேலியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரான பிக் பாஷில் பிரகாசித்த விக்கெட் காப்பாளர் ஜொஷ் பிலிப், வேகப்பந்து வீச்சாளர்கள் றிலே மெரெடித், டேனியல் சாம்ஸ் ஆகியோர் அவுஸ்திரேலியக் குழாமில் இடம்பெற்ற நிலையில், தமது சர்வதேச அறிமுகங்களை இங்கிலாந்துத் தொடரில் இவர்கள் மேற்கொள்வார்கள் என நம்பப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 24 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.